விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை (14.12.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360




# ஏ-9 பாதையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்



## யசூசி அகாஷி வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கைக்கான யப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி வலியுறுத்தியுள்ளார். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சர்வதேச சர்வமத மாநாட்டில் கலந்து கொண்டு இறுதி நாளான நேற்று அவர் ஆற்றிய உரையின் போதே இதனைத் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றப் பாதுகாப்பிலுள்ள இளைஞனை இராணுவம் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்து நீதிமன்றப் பாதுகாப்பிலுள்ள இளைஞர் ஒருவரைப் படையினர் விசாரணை செய்வதற்கு யாழ்.நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த இளைஞனை விசாரணை செய்வதற்கு அனுப்பி வைக்குமாறு படையினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க யாழ்.மாவட்ட பதில் நீதிவான் கேசவன் இவ் அனுமதியை வழங்கியுள்ளார்.

குறித்த இளைஞனின் வீட்டிலிருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் அது தொடர்பாக விசாரணை செய்வதற்காக இவ்விளைஞனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு இராணுவத்தினர் நீதிமன்றைக் கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## எம்.பிக்களின் உறவினர்கள் கடத்தல் ஐரோப்பிய ஒன்றியம் கடும் கண்டனம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் கடத்தப்பட்டுள்ளமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக கொழும்பிலுள்ள இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் கடத்தப்பட்டுள்ளமை குறித்து, ஐரோப்பிய ஒன்றியம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தரையிறங்கும் பொறி இயங்காததால் 3 மணிநேரம் வட்டமடித்த விமானம்

(கொழும்பு)

கொழும்பு - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் எக்ஸ்போ நிறுவனத்தின் விமானம் நேற்று பலாலியில் தரையிறங்க முடியாமல் சுமார் மூன்று மணிநேரம் வானில் வட்டமடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு சுமார் 50 பயணிகளுடன் இரத்மலானையிலிருந்து யாழ்.நோக்கி பயணித்த அவ் விமானம் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்ட போது விமானத்தின் தானியங்கி தரையிறங்கும் பொறி செயற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி நேரத்திலேயே தீர்மானம் இ.தொ.கா., ம.ம.மு. தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தினை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? என்பது தொடர்பில் இறுதி நேரத்திலேயே முடிவெடுக்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் நாம் இன்னமும் தீர்க்கமான முடிபினை எடுக்கவில்லை. இறுதிநேரத்தில் அதாவது நாளை (இன்று) எமது (10 ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட்டில் வெற்றி பெற ஆளுந்தரப்பும் தோற்கடிக்க எதிர்த்தரப்பும் கடும் முயற்சி

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் வெற்றி பெற்றுவிட வேண்டுமென ஆளுந்தரப்பினரும் எப்படியாவது திட்டத்தினை தோற்கடித்துவிட வேண்டுமென்று எதிர்த்தரப்பினரும் ஏட்டிக்குப் போட்டியாக செயலில் இறங்கியுள்ளனர்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில்வெற்றி பெற்ற அரசாங்கம் மூன்றாம் நிலை வாக்கெடுப்பிலும் வெற்றிபெறலாம் என்ற நிலை காணப்பட்டது. ஆனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தை விட்டு நேற்று முன்தினம் வெளியேறியுள்ளமையையடுத்து ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடன் கலந்துரையாடி வரவு-செலவுத் திட்டத்தினை தோற்கடிக்கும் முனைப்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது.

இலங்கைத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கும் முடிபில் மாற்றம் இல்லை

### ஜே.வி.பி. தெரிவிப்பு

வரவு-செலவுத் திட்டத்தினை எதிர்க்கும் எமது முடிபில் எவ்வித மாற்றமுமில்லை. 2 ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எடுத்த முடிபிலிருந்து நாம் மாறப் போவதில்லை என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹன்துன்நெத்தி தெரிவித்தார்.

அரசாங்கத்தின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் யுனிசெவ்வின் புதிய பிரதிநிதி நேற்று சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனை ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பான யுனிசெவ்வின் புதிய பிரதிநிதி பிலிப்பி நிமாலி நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள தமிழீழ அரசியல்துறை நடுவகப் பணிமனையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. இச் சந்திப்பின்போது விடுதலைப்புலிகளின் தரப்பில் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், படைத்துறைப் பேச்சாளர் இ.இளந்திரையன், மனித உரிமைகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரவூவ் ஹக்கீமின் பாதுகாப்பு விலக்கல்

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூவ் ஹக்கீமின் பாதுகாப்பை அரசாங்கம் விலக்கியுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, அரசாங்கத்திலிருந்து வெளியேறிய முஸ்லிம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் ரீதியான எந்த சவால்களையும் வெற்றி கொள்ள அரசாங்கம் தயார்

### அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா உறுதி

(கொழும்பு)

வடக்கில் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் வெற்றிகரமாக முகம் கொடுத்து வருவது போலவே நாடாளுமன்றத்திலும் எதிர்கொள்ளும் அரசியல் ரீதியிலான சவால்களையும் அரசாங்கம் வெற்றி கொள்ளுமென தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்ஷன யாப்பா நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை வியாபாரிமூலையில் வீடொன்றினுள் குண்டு வெடிப்பு

### இருவர் பலி; அறுவர் படுகாயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரிமூலைப் பகுதியில் பொதுமக்கள் வசிக்கும் வீடொன்றுக்குள் விடுதலைப்புலிகள் இருவர் தற்கொலை செய்து கொண்டமையால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவிகள் இருவர் உட்பட ஆறு பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பருத்தித்துறையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது. இப் பிரதேசத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்கு ஒரு போதும் அநீதி இழைக்கவில்லை

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு இந்த அரசு அநீதி இழைத்ததன் காரணமாகவே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்றார் எனப் பரப்பட்டுள்ள கருத்துப் பிழையானது என்றும் முன்னைய அரசாங்கங்களை விட இந்த அரசே முஸ்லிம்களுக்கு அதிக சேவை புரிந்துள்ளது எனவும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர்மேலும் கூறியதாவது,

முஸ்லிம்களுக்கு விடுதலைப் புலிகளால் தான் பிரச்சினையாக உள்ளது. அரசாங்கம் அவர்களுக்கு எந்தவித அநீதியையும் இழைக்கவில்லை.

அவர்களுக்கு அரசாங்கம் அநீதி இழைத்ததாக எவரும் கதைகளை பரப்ப முனைய வேண்டாம். முஸ்லிம்களுக்கு அரசாங்கம் அநீதி இழைப்பதாக ரவூவ் ஹக்கீம் கூறியுள்ளார்.

அவர் அரசுடன் ஒட்டிக்கொண்டிருந்த காலங்களில் இல்லாத இந்தக் கருத்து ஏன் திடீரென உருவானது. இதன் பின்னணியில் பல்வேறு அரசியல் காரணிகள் இருக்கலாம்.

நாடாளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் உறுப்பினர் அனைவருக்கும் எமது அரசு அமைச்சுப்பதவிகளை வழங்கியது. இது முஸ்லிம்களை கௌரவிக்கும் செயலாகும்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் 15 ஆண்டுகள் பூரணமாகியும் மீள் குடியேற்றப்படாமைக்கு புலிகளின் நடவடிக்கையே காரணம்.

கிழக்கைப்போன்று வடக்கிலும் இவர்களை மீள் குடியேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கிழக்கை மீட்ட பின்னர் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கு அரசாங்கம் மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகளே காரணமாகும். மூதூர், சம்பூர் மற்றும் சேருநுவர பிரதேசங்களில் முஸ்லிம்களின் மீது புலிகள் தாக்குதல் நடத்தி வெளியேற்றிய போது அவர்களை உடனடியாக சொந்த இடங்களில் மீள் குடியேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

ஜனாதிபதி முஸ்லிம்களுக்கு எதிரானவர் அல்ல. அவர் சர்வதேச முஸ்லிம்களுக்காகவே குரல் கொடுத்தவர். இதனை சர்வதேச முஸ்லிம் நாடுகள் நன்கு விளங்கி வைத்துள்ளன.

இதனால் தான் பாலஸ்தீனிய ஒரு வீதிக்கே ஜனாதிபதியின் பெய்ரை சூட்டியுள்ளனர். ஈரானுக்கு ஜனாதிபதி மேற்கொண்டவிஜயத்தின்போது ஏராளமான உதவிகளை அந்நாடு வழங்க முன்வந்ததும் ஜனாதிபதியின் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையினாலேயேயாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# படையினரின் அம்புலன்ஸ்களில் செல்ல கிளிநொச்சி நோயாளர்கள் அச்சம்

(கிளிநொச்சி)

படையினரின் அம்புலன்ஸ் வண்டிகளில் பயணிப்பதற்கு நோயாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பொறுப்பதிகாரி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதாரப் பணிப்பாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் வவுனியா படைத்தளபதி ஆகியோருக்கு நேற்று அவசர அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

படையினர் கடந்த 15 நாட்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு பொது மருத்துவமனைகள் மற்றும் மல்லாவி மருத்துவ மனை அம்புலன்ஸ் வண்டிகளை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் திருப்பி அனுப்புவதுடன் நோயாளர்களை தங்களின் அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி வவுனியா பொது மருத்துவமனைக்கு அனுப்பி வருகின்றனர். இந்நிலையில் அம்புலன்ஸ் வண்டிகளை வவுனியா பொது மருத்துவமனைக்கு நேரடியாக அனுமதிக்க வேண்டும்.

படையினரின் அம்புலன்ஸ் வண்டிகளில் நோயாளர்களுடன் செல்லும் மருத்துவர்கள், தாதியர்கள் பயணிக்க விரும்பவில்லை எனவும் மருத்துவர் சத்தியமூர்த்தி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ச-5)

# இலங்கைக்கான பிரிட்டன் தூதரின் கருத்துக்களுக்கு இலங்கை அரசு கண்டனம்

(கொழும்பு)

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டொமினிக் சில்கொட் கடந்த திங்கள் அன்று ஒரு கூட்டத்தில் தெரிவித்த சில கருத்துக்கள் தொடர்பாக இலங்கை அரசு தனது முறையான எதிர்ப்பை தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளைப் பற்றி குறிப்பிட்ட சில்கொட் தமிழர் தாயகம் என்ற அரசியல் அபிலாஷையையே நியாயத்தன்மை அற்றது என்று தான் கூறமாட்டேன் என்று கூறியிருந்தார்.

சில்கோட்டை வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைத்த இலங்கை அரசு அதிருப்பதியை வெளியிட்டது. பிரிட்டிஷ் அரசு தனி நாடு ஒன்று உருவாக்கப்படுவதை உறுதியாக நிராகரித்திருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அரசியல் அபிலாஷைகள் நியாயமான வழிகள் மூலம் தெரிவிக்கப்படவேண்டும் என்று பொருள்படதான் இதனைக் கூறியிருந்ததாக சில்கொட் கூறினார். (எ-5)

# ஜப்பானிய அரசு இலங்கைக்கு உதவிகளை அதிகரித்துள்ளது

(கொழும்பு)

ஜப்பான் இலங்கைக்கான தன்து நிதியுதவியினை அதிகரித்துள்ளது. இதற்கான உடன்பாடு அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் டோக்கியோ விஜயத்தின் போது முடிபு செய்யப்பட்டது.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையேயான உறவுகள் 1977 ஆம் ஆண்டு முதல் உறுதியாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என்பதை அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது சுமார் 2 பில்லியன் யென் அளவுக்கு நிதியுதவிகளை ஜப்பான் அளிக்கும் என உறுதி வழங்கப்பட்டுள்ளது.

இது பொருளாதார வளர்ச்சிக்கு என்று கூறப்பட்டு வழங்கப்பட்டாலும் அவை முழுவதும் அதற்காகவே செயல்படுத்தப்படுமா என்பது குறித்து ஜப்பானிய அரசு போதிய கரிசினைகளை வெளிப்படுத்தியதாக தெரியவில்லை.

ஜப்பானுடைய தற்போதைய செயற்பாடுகள் இலங்கையைப் பொறுத்தவரை சிக்கலுக்குள்ளாகி இருக்கிறது. பொருளாதார அபிவிருத்தியையும் தாண்டி ஒரு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நிதியுதவியாகவும் பார்க்கப்படுகிறது.

தற்போது இலங்கையில் இரு தரப்பினரும் யுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையிலும் பெரிய அளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்ற பின்னணியிலும் ஜப்பானின் இந்த உதவி சமாதானம் தொடர்பில் அதற்கு இருக்கும் பொறுப்பு என்பது பற்றி பெரிய அளவில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கந்தபுராண படிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பசுபதீஸ்வர ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை, கந்தபுராணப் படிப்பில் வள்ளி திருமணம் இடம் பெறவுள்ளது.

மாலை மகேஸ்வர பூசை. இடம்பெறுவதோடு கந்தபுராணப் படிப்பு பூர்த்தியடையும். (ச-52)

# ரவூவ் ஹக்கீமின் திடீர் முடிபினால் ஐ.தே.கவே நன்மை அடையும்

## பிரதி அமைச்சர் நிஜாமுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை விட்டு முஸ்லிம் காங்கிரஸ் இத்தனை அவசரமாக பிரிந்து செல்ல என்ன தான் காரணம்? இதனால் என்ன லாபம்? சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என்றும், நம்ப முடியாத சமூகம் என்னும் அவப் பெயரை நாம் பெற்றுக்கொள்வதைத் தவிர ரவூவ் ஹக்கீமின் இந்த தீர்மானத்தால் வேறு எதுவும் முஸ்லிம்களுக்குக் கிடைக்கப்போவதில்லை.

ஹக்கீமின் இந்த அவசரமான முடிபு சமூக நலன் சார்ந்ததல்ல. அதற்கு வேறு ஒரு நோக்கம் இருப்பதாகவே நான் உணர்கிறேன் என்று முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான எஸ். நிஜாமுதீன் தெரிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அக்கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினரும் நேற்று முன்தினம் அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்றமை தொடர்பில் அக்கட்சியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான நிஜாமுதீன் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இவர் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பிரதி அமைச்சர் நிஜாமுதீன் மேலும் கூறியதாவது,

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பில் அரசுக்கு சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் வாக்களித்து விட்டு மூன்றாவது வாசிப்புக்கு எதிர்த்து வாக்களிப்பது என்பதில் என்ன தான் நியாயம் இருக்கின்றது?

ஹக்கீம் இவ்வாறானதொரு முடிபை எடுக்கப்போவதாக கூறியபோது, அதன் பின் கட்சி எடுக்கும் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் பதில் எதுவும் கூறவில்லை.

மேலும் ரவூவ் ஹக்கீமின் இவ்வாறான முடிபினால் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் நன்மை கிடைக்கப்போகிறது. அப்படியென்றால் ஐ.தே.கவிடமிருந்து எமது சமூகத்திற்கு கிடைக்கும் இலாபம் என்ன என்றும் கேட்டேன். அதற்கும் ஹக்கீமிடமிருந்து சரியான பதில் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு அரசாங்கத்தோடும் சண்டை பிடித்துக்கொண்டு அவைகளை கவிழ்க்கும் முயற்சியிலும் மு.கா. தலைவர் ஈடுபட்டபோதெல்லாம் அவரின் முடிபுகளுக்கு ஏற்ப ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர் பின்னால் சென்றனர்.

ஆனால் அவ்வாறான முடிபுகளால் நமது மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை. அதனால் தான் இம்முறை நான் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தேன்.

மூன்றவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பிலும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு நமது பிரச்சினை பற்றி அரசுக்கு முழுமையாக விளக்கமளித்துவிட்டு அதற்குப் பின்னரும் சரியான தீர்வு கிடைக்காத பட்சத்தில் நாம் அரசில் இருந்து விலகலாம் என்று ரவூவ் ஹக்கீமிடம் கூறினேன். ஆனால் அதை அவர் ஏற்கவில்லை.

முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினை பற்றியும் அவை தீர்க்கப் படாமையினால்தான் மு.கா. இவ்வாறான முடிபை எடுத்து அரசை விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

உண்மையாவே இந்த காணிப் பிரச்சினையானது இன்று நேற்று ஆரம்பமானதொன்றல்ல. மறைந்த தலைவர் அஷ்ரப் காலத்திற்கு முன்பிருந்தே அது இருந்து வருகிறது. எனவே இப்பிரச்சினையை இத்தனை வேகத்துடனும் அவசரத்துடனும் தீர்க்க முடியாது.

ஹக்கீமின் இந்த அவசர முடிபு சமூக நலன் குறித்ததல்ல. அதற்கு வேறொரு காரணம் இருப்பதாகவே நான் உணர்கிறேன் என்று நிஜாமுதீன் மேலும் தெரிவித்தார். (எ)


## வரதீட்சை மாலை வழுங்குதல்



ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்களுக்கு வரதீட்சை மாலை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமையும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.00 மணி முதல் 12.00 மணிவரை யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

இம்மாலையை அணிய முற்கூட்டியே பதிவு செய்தவர்களும், அணிய விரும்புபவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு:
ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,
மணியர்பதி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொ.பே.இல:222 2935

ஸ்ரீ கல்கி சுவர்ணயுக அமைப்பகம்
யாழ்.கிளை.

(676)

சாமியே சரணம் ஐயப்பா



## வியாவில் ஐயனார் கோவில்

## மகரஜோதிப் பெருவிழா

எதிர்வரும் 16.12.2007 ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.00 மணி முதல் ஐயப்ப பெருமானுக்கு மகரஜோதிப் பெருவிழா சாஸ்தா பீடம் பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் தலைமையில் பிரபல சிவாச்சாரியார்களால் நடாத்தி வைக்கப்படும்.

யாழ்.மாவட்டம் 18 ஆம் படி குருசாமி அ.இந்துதாசன் (தாவடி-ஸ்ரீ சடகோப ராமானுஜ ஐயப்ப பக்தர் சபை-மதுரை) கலந்து கொள்ளும் இவ்விழாவில் ஏனைய குருசாமிகள், மாலை அணியப் பெற்ற ஐயப்ப சுவாமிகள், அடியார்கள் அனைவரும் கலந்து ஐயப்பன் அருள் பெற்றுய்யும் வண்ணம் அழைக்கப்படுகிறார்கள்.

பிரபல நாதஸ்வர வித்துவான்கள் என்.கே.கே.பவப்பிரியன், கே.நாகதீபன் ஆகியோரும் தவில் வித்துவான்கள் ஆர்.முருகானந்தம் (நடுவில்), எஸ்.சதீஸ்குமார் (குட்டி) ஆகியோர் கலந்து கொள்ளும் விசேட நாதஸ்வர -தவில் கச்சேரியும் இடம்பெறும்.

மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

ஐயனார், வியாவில், காரைநகர்.
ஆலய பரிபாலனர்கள்.

(இ-60)

விளம்பர அனுசரணை:
கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

# இன்று ஒரு தகவல்

## மனமும் குரங்கும்

ஒருமுறை உலகம் ஏன் உங்களைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது ? என்று பெர்னாட்ஷாவைப் பார்த்துக் கேட்டார்களாம். அதற்கு அவர் சொன்னாராம்– "ஒரு வருஷத்திலே இரண்டு அல்லது மூன்று முறைக்கு மேல் யாருமே சிந்திப்பது கிடையாது. நான் வாரத்துக்கு ஒரு தடவை, இரண்டு தடவை சிந்திக்கிறேன். அதுதான் உலகம் என்னைச் சிந்தனையாளன் என்று பாராட்டுகிறது" என்றாராம்! இதிலிருந்து, மனிதர்கள் யாருமே அதிகமாகச் சிந்திப்பது இல்லையென்று தெரிகிறது.

மனம் சுத்தமாக இருந்தால்தான் சிந்தனை தெளிவாக இருக்கும். மனம் எந்த அளவுக்குச் சுத்தமாக இருக்க வேண்டும் தெரியுமா? மார்க்கஸ் அரேவியஸ் என்னும் அறிஞர் அதற்கு ஓர் அளவு கோல் கொடுத்திருக்கிறார். திடீரென்று உங்கள் முன் ஒருவர் வந்து "இப்பொழுது நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்..." "அப்படியே சொல்லுங்கள்" என்று கேட்டால் உடனே தயங்காமல் உள்ளது உள்ளபடியே "இதைத் தான் இப்பொழுது நான் நினைத்துக்கொண்டிருந்தேன்" என்று சுலபமாகச் சொல்லக்கூடிய அளவுக்கு மனம் இருக்கவேண்டும்; அதுதான் சுத்தமான மனம் என்கிறார் அவர். அப்படிச் சொல்லக்கூடிய நிலையிலா நாமெல்லாம் இருக்கிறோம்?

"வெளிப்படையாகப் பேசுங்கள்" என்று கேட்டால் அது எப்படி? மனதிலே நினைக்கிறதையெல்லாம் வெளியே காட்டிக்கொள்ள முடியுமா? என்று தானே கேட்கிறோம். அப்புறம் எங்கே மனம் சுத்தமாவது? நம்மில் அதிகமானோர் மனதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் அது முடிவதில்லை... சும்மாவா சொன்னார்கள் மனம் ஒரு குரங்கு என்று! மனசுக்கும் குரங்குக்கும் அப்படி என்ன ஒரு சம்பந்தம்? இரண்டும் அடிக்கடி தாவிக்கொண்டிருக்கும். அது தான் நமக்குத் தெரிந்த ஒற்றுமை!

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர்... இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார். மனசு, குரங்கு–இவை இரண்டையும் எப்பொழுதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நமக்குத்தான் கஷ்டம் என்றார். எப்படி? என்றேன். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார்.

ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தாராம் அவர் தன்னுடைய அரண்மனையிலே ஒரு குரங்குக் குட்டியை வளர்த்தாராம். சுவர் ஓரமாக அது மிகவும் சாதுவாக உட்கார்ந்திருக்குமாம். அப்படி இருந்தாலும் கூட, அந்த ராஜா தினமும் ஒரு தடியாலே அதற்கு இரண்டு அடி கொடுப்பாராம். அந்த அடியை வாங்கிக்கொண்டு, அங்கே கிடைக்கும் ஆகாரத்தையும் சாப்பிட்டுக்கொண்டு அது ரொம்ப சாதுவாகக் காலம் கழித்து வந்தது. அந்த ராஜாவுக்கு புதிதாக ஒரு மந்திரி வந்து சேர்ந்தார். தினமும் ராஜா கூடவே இருப்பார் போவார்... வருவார்...!

தினமும் ராஜா அந்தக் குரங்குக் குட்டியை அடிப்பதை மந்திரி பார்த்தார். அவருக்கு சங்கடமாக இருந்தது. "அரசே! இது என்ன அநியாயம்? வாயில்லாத ஜீவன். அதுவுமன்றி மிகவும் சாதுவாக ஒரு மூலையிலே உட்கார்ந்துகொண்டு இருக்கிறது. அதைத் தினமும் அடிக்கிறீர்களே!" என்று கேட்டார். அரசர் யோசித்தார். பின், சரி அமைச்சரே! உங்கள் வார்த்தைக்கு மரியாதை கொடுக்கிறேன்... இன்றையிலிருந்து குரங்கை அடிப்பதைவிட்டு விடுகிறேன். இதோ தடியை வீசிவிடுகிறேன் என்றார். அதன்பின் தினமும் மாலை நேரத்தில் ராஜாவும் மந்திரியும் அந்தப் பக்கமாகப் போவார்கள்.. வருவார்கள். ராஜா அடிப்பதை நிறுத்தியதும் குரங்கு கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. அடுத்த நாள் ஓடி விளையாட ஆரம்பித்தது.

அதன்பின் ராஜாவிடம் ஓடிவந்து கொஞ்ச ஆரம்பித்தது. அடுத்தநாள் அவர் இடுப்பிலே ஏறி உட்கார்ந்தது. அடுத்தநாள் என்ன செய்தது தெரியுமா? ராஜா தோளிலே ஏறி உட்கார்ந்து ஒரு தடியினால் அவர் காதிலே குத்த ஆரம்பித்தது. இதைப் பார்த்தார் மந்திரி... இது என்ன... ராஜா என்கிற மரியாதை இல்லாமல்... என்று சொல்லி அந்தத் தடியைப் பிடுங்கிக் குரங்கை அடிக்க ஆரம்பித்தார். அப்பொழுது ராஜா மந்திரியைப் பார்த்து "இந்த வேலையைத் தானே நான் ஆரம்பத்தில் செய்து கொண்டிருந்தேன்" என்றார். அப்பொழுதான் மந்திரிக்குப் புரிந்தது... குரங்கையும் மனசையும் அடக்கி வைத்திருக்கும்வரைதான் அடங்கி இருக்குமென்று! சில சமயங்களில் குரங்கைவிட மோசமான மனது கொண்ட மனிதர்களும் இருப்பதுண்டு.

திருக்குற்றாலத்திலே ஒரு தடவை ஓர் ஆள் கையிலே வாழைப் பழத்துடன் வேகமாக ஓடிக்கொண்டிருந்தான். பின்னால் ஒரு குரங்கு அவனைத் துரத்திக்கொண்டு வந்தது. அதற்குப் பின் ஒருவர் வெறுங்கையுடன் மனிதனையும் குரங்கையும் துரத்திக்கொண்டு வந்து கொண்டிருந்தார். வழியிலே ஒருவர் வெறுங்கையோடு ஓடி வந்தவரை நிறுத்திக் கேட்டார் அந்த ஆள் கையிலே வாழைப்பழம் வைத்திருக்கிறான். குரங்கு பறிந்து விடுமோ என்ற பயத்தில் ஓடுகிறான். உன்னிடம் எதுவும் இல்லை. நீ ஏன் இரண்டு பேரையும் துரத்திக்கொண்டு ஓடுகிறாய்?

குரங்கு வாழைப்பழத்தைப் பார்த்து விட்டது அதனைப் பிடுங்க அவன் பின் ஓடுகிறது. அது நியாயம். நீ எதுவித சம்பந்தமும் இல்லாமல் பின்னால் ஓடுகிறாயே, அது எந்த வகையில் நியாயம்? என்று கேட்டார்? நான் ஓடுவது தான் நியாயம் என்றார் அந்த ஆள். எப்படி? என்றார் அவர். அந்த ஆள் என் கடையிலே வாழைப்பழம் வாங்கினான். காசுகொடுக்காமல் ஓடுகிறான் என்று சொல்லி விட்டு மீண்டும் ஓட ஆரம்பித்தார் அந்த ஆள்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# சிறுபான்மையினர் உரிமைகளை பயங்கரவாதம் எனக்கூறி ஒடுக்கும் சக்திகளுக்கு துணை போகிறது அனைத்துலகம்

சிறுபான்மையினர் உரிமைகளை பயங்கரவாதம் எனக்கூறி ஒடுக்கும் சக்திகளுக்கு துணை போகிறது அனைத்துலகம் என்று அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் தலைவர் எஸ்.ஜெயநேசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சர்வமத சமாதான ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துலக மனித உரிமைகள் நிகழ்வானது ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு இராமகிருஸ்ணமிஷன் முதல்வர் சுவாமி அஜராத்மானந்தாஜி தலைமை வகித்தார். நிகழ்வில் எஸ். ஜெய நேசன் அடிகளார் ஆற்றிய உரை,

இலங்கை போன்ற நாடுகளில் பெரும்பான்மையினரின் சட்டங்கள், சிறுபான்மையினரின் மனித உரிமைகளை மறுப்பதால் தான் அந்நாடுகளில் இரத்தக் களரி ஏற்படுவது நாளாந்த நிகழ்வாக மாறிவிட்டது.

உலகின் பல நாடுகளில் பெரும்பான்மையைப் பலமாகக் கொண்டு சாதாரண சிறுபான்மை இனத்தினுடைய மனித உரிமைகள் மறுக்கப்படுவதும் [illegible] மட்டுமன்றி தம்பலத்தைக் கொண்டு சட்டங்கள் கூட உருவாக்கப்படுகின்றன. அச்சட்டங்களை வைத்து சிறுபான்மையினர் மற்றும் நலிவுற்றோரின் மனித உரிமைகள் மறுக்கப்படுவது நாளாந்த செயற்பாடாகி விட்டது. இந்த விதிக்கு இலங்கையும் விதிவிலக்கு அல்ல.

மனித மாண்புகள் மதிக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். சிறுபான்மை சமூகம் தம் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் போது உலக அரங்கு அதற்கு பயங்கரவாதம் எனக்கூறி சிறுபான்மை சமூகத்தை அடக்கும் சக்திகளுக்கு துணைபோக முற்படுகின்றது. இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைப்பாடாகும். இலங்கையைப் பொறுத்தவரை இன்றிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மனித உரிமைகளை மறுக்கும் ஒரு சட்டமாகும். யுத்தம் நடைபெறுவதால் இச்சட்டம் நடைமுறையில் உள்ளது. இதனால் யுத்தத்தின் வடுக்களை விட இச்சட்டத்தின் வடுக்கள் அதிகம். இந்நிலையில் இந்நாட்டில் யுத்தம் ஓய வேண்டும். யுத்தம் ஓய்ந்து அமைதி ஏற்பட்டால்தான் மனித உரிமைகளின் பெறுமதியை இந்நாட்டில் புரிந்துகொள்ள முடியும்.

நான் ஒரு சமயத்தலைவர் என்பதால் ஆன்மீக ரீதியிலும் கூறினால் நன்கு புரியும், கடவுள் மனிதனை தன் சாயலாக முழு ஆளுமையோடும் சுதந்திரத்தோடும் படைத்தார். இது அனைத்து மதங்களின் அடிப்படை கோட்பாடாகும்.

ஆளுமை சுதந்திரம் என்று கூறும்போது முழு உரிமைகளையும் இறைவன் கொடுத்தார். இந்த உரிமைகளை யாரும் பறிக்க முடியாது. அப்படிப் பறித்தால் அது இறைவனுக்கு விரோதமான பாவமாகும். இப்பாவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தும். இன்று உலகம் இத்துயரத்தில் தான் விடுபடமுடியாமல் இன்றும் பல அடிமைத்தனங்களை உருவாக்குகிறது. இதனால் மனித உரிமைகள் மீறப்படுகின்றது என்றார் அவர். (அ-5)

# வயதுக்கேற்ற வளர்ச்சி இல்லாத நிலையில் வடமராட்சி மாணவர்கள்

வடமராட்சியில் 45 வீதமான மாணவர்கள் வயதிற்கேற்ற உடல் வளர்ச்சியற்றவர்களாகக் காணப்படுவது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களம், பாடசாலை மாணவர்களிடையே நடத்திய ஆய்வின் மூலமே இக்குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கரவெட்டிப் பிரதேசத்திலேயே இந்நிலை கூடுதலாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமை எதிர்கால சந்ததியினரிடையே பல பாதிப்புக்களை ஏற்படுத்துமென அஞ்சப்படுகின்றது. குறிப்பாக பெண்பிள்ளைகள் வளர்ந்து தாய்மையடையும் காலத்தில் குறைப்பிரசவம், சிசுமரணம், போசாக்கற்ற குழந்தைகளின் பிறப்பு ஆகியவற்றினை அதிகரிக்கச் செய்ய வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)



கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் "நீரிழிவில் சிறுகுறிஞ்சா" எனும் இறுவட்டு வெளியீட்டு விழாவில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் மங்கல விளக் கேற்றுவதையும்,மருத்துவ மாணவன் ரி.பாலகுமாரன் அறிமுக உரையாற்றுவதையும்,சிறப்பு விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-யதார்த்திகன்)

# இராசிபலன்

14.12.2007
(கார்த்திகை 28,வெள்ளிக்கிழமை)
பஞ்சமி பின்னிரவு 02.53 மணிவரை
திருவோணம் பிற்பகல் 05.45 மணிவரை
இராகுகாலம் 10.51-12.21 மணிவரை
சுபநேரம் 06.21-07.51மணிவரை
இராமநாதர் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்ச்சி, தெய்வதரிசனம், முயற்சி கைகூடும், தூரதேசச் செய்தி. |
| இடபம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல்,உடல் உழைப்பு, வீண்பயம், புதிய திட்டமிடல். |
| மிதுனம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், மரியாதைக்குறைவு, திடீர்நன்மை. |
| கடகம் | நல்ல வரவேற்பு, தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், தனவரவு. |
| சிங்கம் | தெய்வசிந்தை, சத்துருஜெயம், திடீர் பயணம், ஆரோக்கியம். |
| கன்னி | வியாபார நன்மை, ஆரோக்கியக் குறைவு, குடும்பக்கவலை, பணவிரயம். |
| துலாம் | பயந்த சுபாவம், மாதாசுகம், வாகன சுகம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | தெய்வதரிசனம்,எடுத்தகாரியம்கைகூடும், உறவினர் வழிநன்மை, போசனசுகம். |
| தனு | வேலைச்சுமை, நண்பாகள் விரோதம், தன்விரயம், குடும்பக்கவலை. |
| மகரம் | தெய்வசிந்தை, அதிக பிரயாசை, புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |
| கும்பம் | பிரயாணம், அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், சுபசெலவு. |
| மீனம் | தெய்வதரிசனம், பொருள் சேர்க்கை, தொழில் சிந்தை, காரிய அனுகூலம். |

வ ள வ ன்

# தமிழ்பேசும் மக்களின் அவலங்களைத் தீர்க்கவே அரசுடன் இணைந்து அமைச்சராக உள்ளேன்

## சமாதானத்தின் குரல் நானே என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் அவலங்களைதீர்ப்பதற்காகவே அரசாங்கத்துடன் இணைந்து "அமைச்சராக உள்ளேன் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். தமிழ் பேசும் மக்களின் சமாதானத்தின் குரல் நானே எனவும் அவர் கூறினார். பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சுக்கான நிதி யொதுக்கீடு விவாதத்திற்கு பதில ளித்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறி யதாவது,

மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் மேற்கொள்ளப்படும் எந்தப் போராட்டமும் ஒரு போதும் வெற்றியடையாது. அங்கவீனர்கள், முதியோர், வறிய மக்களின் நலனுக்காக எனது அமைச்சு பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் அவலங்களை தீர்ப்பதற்காகவும் அவர்களின்ஜன நாயக தேவைகளை நிறைவேற்றுவதற்கு நான் என்னாலான உதவிகளை மேற்கொண்டு வருகின்றேன்.

அங்கவீனர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கவீனர்கள் தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத்தும்செயற்றிட்டங்களும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இலட்சியப்பயணத்தைநடைமுறைச் சாத்தியமான வழியில் மேற்கொண்டு வருகின்றேன். மக்களின் அவலங்களை தீர்பதற்காகவேநான் அரசாங்கத்துடன் இணைந்துள்ளேன். தேசிய அளவில் நாட்டு மக்களின் துயர் துடைக்க எனது அமைச்சு மூலம் நடவடிக்கைஎடுத்துவருகின்றேன்.

அரச அலுவலகங்கள், போக்கு வரத்து நிலையங்கள் பொதுக் கட்டடங்களில் அங்கவீனர்கள் பிரவேசிக்கக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பொதுக் கட்டடங்களில் அங்கவீனர்கள் பிரவேசிப்பதற்கு வசதிகள் செய்யப்படல் உள்ளிட்ட விடயங்களை கொண்ட சட்ட வரைபு ஒன்று உருவாக்கப்பட்டுவருகின்றது. (அ-5)

# கலாபூஷணம் விருது வழங்கும் விழா

கலைத்துறையின் முன்னேற்றத்திற்காக கலைஞர்கள் ஆற்றியுள்ள தேசிய அரும்பணியை பாராட்டும் வகையில் கலாசார அலுவல்கள்திணைக்களம்,இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம்கலாசாரதிணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள கலாபூசண விருது வழங்கும் விழா நாளை பிற்பகல் 2.30மணிக்கு கொழும்பு ஜோண் டி சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் கலாசார அலுவல்கள் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-5)

# கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட பொருட்கள்

யாழ்.மாவட்டத்திற்கு எம்.வி.யூனி குளோறி -7, எம்.வி.பின்ஃ ரான்- 22 கப்பல்கள் மூலம் தனியார் வர்த்தகர்களினால் கொண்டுவரப்பட்டு தற்போது இறக்கப்படுகின்ற பொருட்களுக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் யாழ்.மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட விலை விபரம் அரசாங்க அதிபர் க.கணேஷினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட விலைப் பட்டியல்

| இல | பொருட்களின்வகை | அலகு | எம்.வி.யூனி குளோறி- 7 விலை | எம்.வி.பின்ஃ ரான் - 22 விலை |
|---|---|---|---|---|
| 1. | சீமெந்து | பைக்கற் | 1,100.00 | 1,100.00 |
| 2. | சாராயம் | போத்தல் | 490.00 | |
| 3. | பீடிதூள் | கி.கி. | 885.00 | |
| 4. | பீடி புகையிலை | கி.கி | 202.00 | |
| 5. | ரயர் | தனி | 500.00 | |
| 6. | ரியூப் | தனி | 200.00 | 200.00 |
| 7. | பிஸ்கட் | கி.கி | 192.00 | |
| 8. | தும்புத்தடி | தனி | 152.00 | |
| 9. | பல்ப்ஸ் | தனி | 38/-, 80/- | |
| 10. | மெழுகுவர்த்தி | தனி | 16.00 | |
| 11. | செத்தல் மிளகாய் | கி.கி | 65.00 | 180.00 |
| 12. | சிமினி | தனி | 80.00 | |
| 13. | சொக்கிளேற் | பெட்டி | 150.00 | |
| 14. | துணி | யார் | 70.00 | |
| 15. | கோப்பி | கி.கி. | 360.00 | |
| 16. | கணனி | தனி | 35,000.00 | 40,000.00 |
| 17. | குக்கர் | தனி | 1,000.00 | 3,650.00 |
| 18. | மல்லி | கி.கி. | 260.00 | 280.00 |
| 19. | கால்நடை தீவனம் | பைக்கற் | 750.00 | 1,300.00 |
| 20. | பருப்பு | கி.கி. | 110.00 | 100.00 |
| 21. | பயறு | கி.கி. | 145.00 | |
| 22. | மாஜறின் | பைக்கற | 200.00 | 200.00 |
| 23. | பாய் | தனி | 150.00 | 150.00 |
| 24. | பால்மா | பைக்கற் | 255.00 | |
| 25. | நுளம்புத்திரி | பைக்கற் | 40.00 | |
| 26. | உழுந்து | கி.கி | 145.00 | |
| 27. | உழுத்தம் குருணல் கி.கி. | | 48.00 | |
| 28. | பெயின்ற் | ரின் | 750.00 | |
| 29. | பப்படம் | கி.கி. | 75.00 | |
| 30. | கச்சான் பருப்பு | கி.கி | 190.00 | |
| 31. | பிளாஸ்ரிக் கப் | தனி | 10.00 | |
| 32. | புண்ணாக்கு | கி.கி | 40.00 | 48.00 |
| 33. | விதை உருளைக்கிழங்கு | கி.கி | 1,250.00 | |
| 34. | உருளைக்கிழங்கு | கி.கி | 90.00 | 100.00 |
| 35. | பேப்பர் | றீம் | 450.00 | |
| 36. | அரிசிவகை | கி.கி | 50/-, 65/- | 65.00 |
| 37. | சாம்பிராணி | கி.கி | 1,200.00 | |
| 38. | தையல்மெசின் | தனி | 4,000.00 | |
| 39. | சம்போ | போத்தல் | 75.00 | |
| 40. | சில்வர் கப் | தனி | 50.00 | |
| 41. | சோடா | தனி | 185.00 | |
| 42. | சீனி | கி.கி | 62.00 | |
| 43. | சூரியகாந்தி எண்ணெய் | லீற்றர் | 225.00 | |
| 44. | புளி | கி.கி | 70.00 | |
| 45. | தேயிலை | கி.கி | 245.00 | |
| 46. | ஓடு | தனி | 85.00 | |
| 47. | ரின்மீன் | தனி | 105.00 | |
| 48. | நெய் | கி.கி. | 750.00 | |
| 49. | மரக்கறி எண்ணெய் | லீற்றர் | 230.00 | |
| 50. | ஈஸ்ற் | பெட்டி | 300.00 | |
| 51. | அலுமினியப் பட்டம் | தனி | - | 600.00 |
| 52. | அமெக்சிலின் | பெட்டி | - | 2820.00 |
| 53. | பாக்கு | கி.கி | - | 110.00 |
| 54. | பாத்ரூம் இணைப்பு | பெட்டி | - | 1250.00 |
| 55. | பெனாட்டில் சிறப் | போத்தல் | - | 118.00 |
| 56. | பிஸ்கட் | பெட்டி | - | 68.00 |
| 57. | தும்புத்தடி | தனி | - | 80.00 |
| 58. | பிறவுண்பேப்பர் | தனி | - | 7/-, 10/- |
| 59. | கயூ | கி.கி | - | 850.00 |
| 60. | கல்சியம் பவுடர் | கி.கி | - | 130.00 |
| 61. | மெழுகுவர்த்தி | பெட்டி | - | 60.00 |
| 62. | காப்பெற் | தனி | - | 68.00 |
| 63. | கோழிக்குஞ்சு தீவனம் | கி.கி | - | 25.00 |
| 64. | தேங்காய் எண்ணெய் | லீற்றர் | - | 210.00 |
| 65. | கயித்து காப்பெற் | தனி | - | 100.00 |
| 66. | கயிறு | கி.கி | - | 200.00 |
| 67. | கொலோன் | போத்தல் | - | 65.00 |
| 68. | கோன்பிளவர் | கி.கி | - | 85.00 |
| 69. | நற்சீரகம் | கி.கி | - | 230.00 |
| 70 | பேரீச்சம்பழம் | கி.கி | - | 85.00 |
| 71. | எசன்ஸ் | றம் | - | 19,000.00 |
| 72. | கோப்பி | தனி | - | 8/-, 28/- |
| 73. | மின்விசிறி | தனி | - | 4,600.00 |
| 74. | போமிக்கா | தனி | - | 1,200.00 |
| 75. | குளிர்சாதனப் பெட்டி தனி | | - | 39,000.00 |
| 76. | உள்ளி | கி.கி | - | 95.00 |
| 77. | ஜெலற் றேசர் | தனி | - | 50.00 |
| 78. | எள்ளு | கி.கி | - | 280.00 |
| 79. | கிரைன்டர் | தனி | - | 38,500.00 |
| 80. | காட்போட் சீற் | தனி | - | 650.00 |
| 81. | கொட்பிளேற் | தனி | - | 650.00 |
| 82. | சாம்பிராணிகுச்சி | பெட்டி | - | 20.00 |
| 83. | அயன்பெட்டி | தனி | - | 700.00 |
| 84. | சர்க்கரை | கி.கி | - | 85.00 |
| 85. | ஜாம் | போத்தல் | - | 120.00 |
| 86. | லாப் எண்ணெய் | கான் | - | 450.00 |
| 87. | சாப்பாட்டு பெட்டி | தனி | - | 60/-, 70/- |
| 88. | மைக்கிறோ அவண் | தனி | - | 15,400.00 |
| 89. | நூடில்ஸ் | கி.கி | - | 45.00 |
| 90. | ஓயில்பேப்பர் | தனி | - | 8/-, 10/- |
| 91. | ஒப்ரோன் | பெட்டி | - | 85.00 |
| 92. | மரக்கறிஎண்ணெய் | கான் | - | 475.00 |
| 93. | பனடோல் | பெட்டி | - | 160.00 |
| 94. | பென்சில் | தனி | - | 8/-, 10/- |
| 95. | மிளகு | கி.கி | - | 185.00 |
| 96. | பிளம்ஸ் | கி.கி | - | 100.00 |
| 97. | பிளாவுட்சீற் | தனி | - | 1,500.00 |
| 98. | தவிடு | கி.கி | - | 48.00 |
| 99. | அடிமட்டம் | தனி | - | 10/-, 15/- |
| 100. | சவ்வரிசி | கி.கி | - | 90.00 |
| 101. | உப்பு | கி.கி | - | 30.00 |
| 102. | சமஹறன் | பைக்கற் | - | 6.00 |
| 103. | பாடசாலை பை | தனி | - | 300.00 |
| 104. | சொக்ஸ் | சோடி | - | 50.00 |
| 105. | சிலிப்பர் | சோடி | - | 100.00 |
| 106. | சப்பாத்து | சோடி | - | 480.00 |
| 107. | சவர்க்காரம் | தனி | - | குறிக்கப்பட்ட விலை+1 |

# மாற்று வலுவுள்ளோருக்கான மெய்வல்லுநர் போட்டியில் சிவபூமி இல்லம் சுற்றுக் கிண்ணத்தை சுவீகரித்தது

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மாற்று வலுவுள்ளோருக்கான மெய்வல்லுநர் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சிவபூமி இல்லம் சுற்றுக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டது.

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட மாற்று வலுவுள்ளோருக்கான மெய்வல்லுநர் போட்டிகள் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் சிவபூமி இல்லம், ஆர்க் பாடசாலை, வாழ்வகம் ஆகியவற்றுடன் 35 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் 212 பேர் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்பு , சிவபூமி இல்ல மாணவர்களின் உடற் பயிற்சி கண்காட்சி ஆகியவற்றுடன் ஓட்டப் போட்டி,குண்டெறிதல்,ஈட்டி எறிதல், தட்டெறிதல் ஆகிய நிகழ்வுகள் ஆண்-பெண் இரு பாலாருக்கும் தனித்தனியாக நடைபெற்றன.

ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று சிவபூமி இல்லம் சுற்றுக்கிண்ணத்தை பெற்றுக்கொண்டது. போட்டியில் பங்குகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (அ-5)

# தகவல் தொடர்பாடல் கற்கைநெறி

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை போன்ற பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கல்வி தகைமை :-**

க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் பாடங்களில் திறீமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல் வித் தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாகாணப் பணிப்பாளர் NAITA, இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.12.2007க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் பொ.இராமநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (6)



யாழ்.செய்திகள்

# திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட தென்மோடி நாட்டுக் கூத்துப் போட்டி முடிபுகள்

திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டியின் முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டி கடந்த 10,11 ஆம் திகதிகளில் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. முடிபுகள் வருமாறு,

**திறந்த போட்டி**

முதலாம் இடம்: 'புனிதவதி' (நெறியாள்கை- அண்ணாவியார் டானியல் பெலிக்கான், நாவாந்துறை), இரண்டாம் இடம் : 'புலவருக்கு தலையீந்த புரவலர்' (நெறியாள்கை-அண்ணாவியார் மு.அருள்பிரகாசம், பாசையூர்), மூன்றாமிடம்: 'சோழன் மகன்' (நெறியாள்கை- யூ.அஜித்குமார், நாவாந்துறை கலா சாரப் பேரவையின் நாடகக் குழு)

**பாடசாலை மட்டப் போட்டி**

முதலாமிடம்: 'ஞானசௌந்தரி' (புனித அன்னாள் பாடசாலை, மானிப்பாய்), இரண்டாமிடம்: 'கிளியோபட்ரா' (மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்), மூன்றாமிடம்: 'கண்டி அரசன்' (றோ.க.வித்தியாலயம், நாவாந்துறை )

இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு எதிர்வரும் 22,23ஆம் திகதிகளில் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்படவுள்ள கூத்து விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகளின் போது இடம்பெறவுள்ளது.

திறந்தபோட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கூத்துக்களுக்கு முறையே பத்தாயிரம், எண்ணாயிரம், ஆறாயிரம் ரூபாவும், பாடசாலை மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கூத்துகளுக்கு ஆறாயிரம், நாலாயிரம், மூவாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் திறந்த போட்டிகளில் பங்குபற்றிய ஒவ்வொரு கூத்துக் குழுவுக்கும் ஊக்குவிப்புத் தொகையாக மூவாயிரம் ரூபாவும், பாடசாலை மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய ஒவ்வொரு கூத்துக்களுக்கும் ஊக்குவிப்புத் தொகையாக இரண்டாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. இதன்போது சான்றிதழ்களும் வழங்கப்படும். (அ)

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ வெங்காயம் 80ரூபா முதல் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

விலை அதிகரித்த நிலையில் வெங்காயத்தை எதிர்பார்த்த தர நிலையிலும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் ஏ-9 பாதை மூடப்பட்டதை அடுத்து கடந்த இரண்டு போகங்களில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் விற்பனை செய்யப்படாமல் விவசாயிகளின் களஞ்சியங்களில் இருப்பாக இருந்து அழுகிய நிலையில் குப்பையில் வீசப்பட்டன. இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர்.

இந்த நிலையில் விவசாயிகள் வெங்காயச் செய்கை பண்ணுவதை பெருமளவில் கைவிட்டு விட்டதால் யாழ். குடாநாட்டின் சுய பாவனை அளவிற்கும் வெங்காயம் செய்கை பண்ணப்படவில்லை.

வெங்காயம் செய்கை பண்ணப்பட்ட அளவு பெருமளவில் குறைவடைந்திருப்பதால் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ வெங்காயம் 80 ரூபாவுக்கு மேல் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (அ-5)

# விண்ணப்பம் கோரல்

அரசாங்க நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் புகைப்பட பிடிப்பாளர்களுக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**இப்பதவிக்கான தகமைகள்**

1.க.பொ. த. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் புகைப்படக் கலையில் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

2.வயதெல்லை :18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்.மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் பார்வையிடலாம். என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (அ)

# மனித உரிமைகள் மீறல் விவகாரம் —ஆர்பர் மீண்டும் ஆதங்கம்

(கொழும்பு)

தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் செயற்திறன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவலகத்தை இலங்கையில் அமைப்பது தொடர்பான விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கடுமையாக மோதிக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பாக போதியளவு விசாரணைகளோ அல்லது பொதுமக்களுக்கு போதுமான தகவல்களோ அளிக்கப்படவில்லை என்று ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் இதன் போது தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா. வின் மனித உரிமைகள் சபையில் ஆற்றிய உரையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயர்மட்டப் படுகொலைகள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள என்று அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சிறப்பு விசாரணை ஆணைக்குழு ஒன்றை ஒரு வருடத்திற்கு முன்னர் நியமித்திருந்தார் .அப்போது இந்த குழு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது எனினும் அவர்கள் எந்த ஒரு வழக்கையும் இது வரை நிறைவு செய்யவில்லை.

அனைத்துலக நிபுணர் குழுவினரும் இந்த விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு வரவழைக்கப்பட்டி ருந் தனர் எனினும் அவர்கள் இந்த விசாரணைக்குழு அனைத்துலக தரத்திற்கு அமைவாக இல்லை என தெரிவித்திருந்தனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்திருந்தபோதும் இன்று வரை போதுமான விசாரணைகளோ அல்லது மக்களுக்கு நம்பிக்கை தரும் நடவடிக்கைகளோ பெரும்பாலான மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்கு களில் மேற்கொள்ளப்படவில்லை.

எனது பயணத்தின் போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்காமல் போனதும் வருத்தத்தை தருகின்றது என்றார் அவர்.

இதனிடையே அவசரகாலச் சட்ட விதிகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட தமிழ் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக தாம் கவலை கொண்டுள்ளதாக ஐ.நா.சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் அண்மையில் கொழும்பில் பெரும் தொகையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களும் அடங்குவர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த இலங்கையின் ஐ. நா. விற்கான நிரந்தர தூதுவர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளதாவது, ஆர்பரின் அலுவலகம் மற்றும் அனைத்துலக அமைப்புக்களின் கருத்துக்களுக்கு அமைய எமது செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களை எப்போதும் தெரிவிப்பதுண்டு .தேசிய நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும் அனைத்துலகத்தின் அனுசரணை மற்றும் உதவிகளுடன் மேற்கொள்ளப்படும். எனினும் தேசிய நிறுவனங்கள் அற்ற எந்த அமைப்பினாலும் அதனை பிரதியீடு செய்ய முடியாது.

இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவதில் ஜனாதிபதி உறுதியாகவும் விட்டுக்கொடுப்புடனும் உள்ளார். நாம் ஒஎச்சிஎச்ஆர் அமைப்புடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். எனினும் எந்த உடன்பாடுகளும் எட்டப்படவில்லை. பலதரப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக நாம் கலந்துரையாடி வருகின்றோம்.

உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான ஐ.நாவின் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியான கலாநிதி வோல்ரர் கலின் நேற்று முன்தினம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. பலவந்தமாக காணாமல் போனோர் தொடர்பான ஐ.நா வின் செயற்குழுவின் பிரதிநிதிகளான சன்ரி யாகோ கொர்சியூரா மற்றும் ஸ்ரேபென்சன் ராப்போர் ஆகியோரின் இலங்கைக்கான பயணத்திற்கு அரசு கொள்கையளவில் இணங்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு பயணம் செய்த போது கருத்துக்கள், காணாமல் போனோர் தொடர்பான விடயங்களில் தான் சிறப்பு கவனம் செலுத்தியதாகவும் ஆர்பர் சபையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## மனித உரிமைகள் உள்ளிட்ட 5 அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு நிறைவேற்றம்

மனித உரிமைகள் அமைச்சு உட்பட ஐந்து அமைச்சுக்களுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தில் 34 வாக்குகளால் நிறைவேறியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிவா ஜிலிங்கத்தின் கோரிக்கையை அடுத்து பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இவ் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 14 பேரும் எதிர்த்து வாக்களித்தனர். இ.தொ.கா. உறுப்பினர் வீ. புத்திரசிகாமணி ஆதரவாக வாக்களித்தார். ஐ.தே.க. உறுப்பினர் ரஞ்சித் அலுவிஹார சபையில் இருந்த போதும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. வாக்கெடுப்பு நடைபெற்ற நேரத்தில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை. (அ-5)

## கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன்னணித் தொழில் பயிற்சியை பயிற்றுவதற்கான அனுமதிக்காக 2007.06.29 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4:3:1 தொகுதியான கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் யாதாயினும் 3 பாடங்களிலும் ஸ்ரீபாத தேசியக்கல்வியியற் கல்லூரிக்கு கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகியவற்றில் ஏதாவதொன்றுடன் பௌதிகவியல், இரசாயனவியல் கூடியதாக 2 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்திருத்தம் ஸ்ரீ பாத தேசியக்கல்வியியற் கல்லூரிக்கு கணித பாடநெறியை பயில்வதற்கு மட்டுமே பொருத்தமானது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2007.12.28 ஆகும். (அ)

# முரளிக்கு கார் கொடுத்தது ஒரு பிரசார உத்தி பிரி. ஊடகம் 'த டெய்லிக்கிறாப்' தெரிவிப்பு

தலைநகர் கொழும்பில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை கைது செய்துவிட்டு அதே நேரத்தில் உலக சாதனை படைத்த இந்திய வம்சாவழித் தமிழரான முரளிக்கு திடீரென வாகனத்தை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பரிசளித்ததாக காட்டிக்கொண்டமை ஒரு பிரச்சார உத்தி என்று பிரித்தானிய ஊடகமான த டெய்லிகிறாப் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் டெய்லிகிறாப்பில் வெளியான செய்தியின் தமிழ் வடிவம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை திருப்திப் படுத்தும் விதமாக அந்த பத்திரிகைகள் இருந்தன. ஆனால் அவரது பிரச்சார உத்திகள் நன்றாக அமையப்போவதில்லை. அது ஒரு எதிர்பாராத வெற்றியாகும்.

பத்திரிகைகளின் முகப்பில் தற்போதைய பந்து வீச்சின் உலக சாதனையாளரான முத்தையா முரளிதரனுக்கு மஹிந்த ராஜபக்ஷ கைகொடுக்கும் காட்சிகள் பிரசுரமாகியிருந்தன. முரளிதரனுக்கு அவர் புதிய பேஜோ ரக வாகனம் ஒன்றின் திறப்பினையும் வழங்கியிருந்தார்.

கண்டியில் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது போட்டியின் போது முரளிதரனுக்கு வாகனம் ஒன்றை வழங்குவதாக இலங்கை கிரிக்கெற்சபை அறிவித்திருந்தது. ஆனால் நாட்டின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ அதனை மாற்றி அமைத்து ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கி விட்டார்.


மஹிந்த ராஜபக்ஷவின் இந்த பிரச்சார உத்தியானது சரியான நேரத்தில் அமைந்து விட்டது. ஏனெனில் கடந்த வாரம் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் தமிழரான முரளிதரன் பந்து வீசி வெற்றியை ஈட்டிய நேரத்தில் கொழும்பில் 2554 தமிழ் மக்கள் அரச படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். அவர்களில் சிலர் குடிநீரோ உணவோ இன்றி மிகவும் மோசமான நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கொழும்பில் இடம் பெற்ற இரு குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து அவர்களை கைது செய்யப்பட்டிருந்தனர் .

இலங்கையைத் தவிர போர் நடைபெறும் எந்த ஒரு நாட்டிலும் அனைத் துலக துடுப்பாட்டப் போட்டிகள் நடைபெறுவ தில்லை. தென்னாபிரிக்கப் போரின் போதும் இந்திய பாகிஸ்தான் இடையிலான பிரிவினையின் போதும் சிறியளவில் தான் விளையாட்டுக் கள் நடைபெற்றிருந்தன.

ஆனால் இலங்கையில் நடைபெறுவது வழமைக்கு மாறானது. இது மிகவும் துன்பகரமானது. ஏனெனில் இலங்கையில் இடம்பெறும் உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 70,000 ஐ தாண்டிவிட்டது. இந்த எண் ணிக்கை காணாமல் போனோரின் எண்ணிக் கைக்கு அப்பாற்பட்டது.

சமூகங்களுக்கு இடையில் மீள ஒன்றுசேர முடியாதவாறு இனப்பிளவுகள் மோசமடைந்துள்ளன. இதற்கு ஒப்பீடுகள் உதவியாக இருக்கலாம்.

இலங்கையில் இரு தமிழ்ச் சமூகங்கள் உள்ளன. அவை இரண்டும் சேர்ந்து மொத்த சனத்தொகையில் 11 விழுக்காடாகும். வடபகுதியில் வாழும் பெரும் தமிழ்ச் சமூகம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. அவர்களை யாழ்ப்பாணத்து தமிழர் எனவும் சில சமயங்களில் அழைக்கப் படுவது உண்டு. யாழ்ப்பாணம் அவர்களின் கலாசார மையம் தமிழீழத்தை விடுதலைப் புலிகள் அடைந்தால் அதுவே அவர்களின் தலை நக



ரம். தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் உள்ளது.

எனினும் ஏனைய பகுதிகளில் இருந்து கடல் மற்றும் வான் வழிகளை தவிர மற்ற வழிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 25ஆண்டுகளாக துடுப்பாட்டம் போன்ற போட்டிகள் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இருந்து முற்றாக மறைந்து போயுள்ளது.

106துடுப்பாட்ட வீரர்களில் 4 பேர் தமிழர்கள். அவர்கள் நாட்டின் வேகப்பந்து வீச்சாளர்கள் வினோதன்ஜோன் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரித்தானியாவுக்கு எதிரான போட்டியில் பந்து வீச்சாளராக பங்குபற்றியிருந்தார்.

அன்று காலை லோட்ஸ் மைதானத்தில் தமிழ் மக்கள் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தி யிருந்தனர். ஆனால் கால் நூற்றாண்டின் பின்னரும் அவர்களின் கோரிக்கை முற்றாக நிறைவு செய்யப்படவில்லை. றசெல் ஆர்னோல்ட் ஓய்வு பெற்ற பின்னர் இலங் கையின் துடுப்பாட்டக் குழுவில் தற்போது உள்ள ஒரே ஒரு தமிழர் முரளிதரனே ஆவார் .அவர் இரு தமிழ்ச் சமூகங்களில் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர். அவர்கள் மலையக தமிழர்கள்.

பிரித்தானியாவின் விக்ரோரியன் காலத்தில் தேயிலைத்தோட்டத்தில் இலைகளை பறித்தல் மற்றும் கூலித் தொழில்களில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அரசும் அவர்களை அந்த தொழிலில் இருந்து விடுவிக்கவில்லை.

தென்னிந்தியாவில் இருந்து அவர்கள் அங்கு கொண்டுவரப்பட்டிருந்தனர். அவர்களில் முரளியின் தாத்தாவும் அடங்குவார். கண்டிக்கும் நுவரெலியாவுக்கும் இடையில் உள்ள மலைப் பகுதிகளில் இந்தச் சமூகம் தற்போதும் தேயிலை இலைகளை பறிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றது.

சிலருக்கு எந்த நாடும் சொந்தமல்ல. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அவர்கள் தேவையற்றவர்களாகி விட்டனர். பிரித்தானியா அவர்களை அங்கு விட்டு சென்றது தான் பிரச்சினை.

முரளிதரனின் தந்தையார் முத்தையா கடுமையாக கல்வி பயின்ற பின்னர் கண்டியின் புறநகர்ப் பகுதியில் றொட்டித் தொழிற்சாலை ஒன்றை தொடங்கியிருந்தார். (அவருக்கு துடுப்பாட்டம் விளையாட நேரம் இருக்கவில்லை) இந்த குடும்ப நிறுவனத்தில் எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த 300 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

உற்பத்தி அறையில் பணியாற்றும் பெண்கள் தொப்பி அணிந்தவாறு மகிழ்ச்சியாக உரை யாடியவாறு பணி புரிகின்றனர். இந்த தொழிற் சாலைக்கு இந்தியா இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து இயந்திரங்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

. தொழிலாளர்களை வேலைத்தளத்திற்கும் வீட்டுக்கும் ஏற்றி செல்வதற்கும் அங்கு பேருந்து ஒன்றுள்ளது.

இங்கு சம்பாதிக்கப்பட்ட போதுமான பணம் முரளியை சென். அந்தோனியார் கல்லூரியில் வாரம் தங்கி படிக்கவைக்க தந்தையாருக்கு உதவியது. அங்கு தான் முரளி இந்த அரிய பொக்கிசத்தை கண்டறிந்தார். போல் கொலிங்வூட்டிற்கு எதிரான அவரது பந்து வீச்சில் கடந்த திங்கட்கிழமை அவர் அதன் எல்லையை தொட்டிருந்தார். போட்டி நடைபெற்ற இடம் அவரது சொந்த இடமாகும்.

அங்கு 3,000 பிரித்தானியாவின் ஆதரவாளர்களும் எண்ணுக்கணக்கற்ற உள்ளூர் ஆதரவாளர்களும் திரண்டிருந்தனர். ஆனால் முரளிதரன் ஒரு சிங்களவராக இருந்தால் மேலதிக எவ்வளவு ஆதரவுகள் குவிந்திருக்கும் என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வி. எல்லாத்தரப்பு அரசியல் வாதிகளையும் சமாளித்தவாறு முரளிதரன் தற்போது கயிற்றில் நடப்பது போல செயற்பட்டு வருகின்றார். ஏழை மக்களுக்கு அதிக உதவிகளைப் புரிபவராக தன்னை மாற்றிக் கொள்ள அவர் முயற்சித்து வருகின்றார்.

அவுஸ்த்திரேலியாவைச் சேர்ந்த சில துடுப்பாட்ட வீரர்கள் ஒரு அலங்கரிப்புக்காக சில உதவி அமைப்புக்களை நிறுவியிருந்தனர். ஆனால் முரளிதரன் அதனை நீண்டகாலமாக இரகசியமாக செய்து வருகின்றார்.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அவர் நிதி உதவி அளித்திருந்த சீனிகம திட்டத்தின் பரிசளிப்பு விழாவுக்கு சென்றிருந் தார். அங்கு அவர் 20 நிமிடங்கள் தாமதமாக செல்லாது நேரத்திற்கு சென்றிருந்தால் ஆழிப்பேரவையில் சிக்கியிருப்பார்.

அவரது நிதி உதவியில் இயங்கி வரும் குட்நெஸ் நிறுவனம் தென்னிலங்கையைச் சேர்ந்த இரு டசின் சிங்கள கிராமவாசிகளுக்கு எல்லாத் துறைகளிலும் உதவி வருகின்றது.

கணனித்துறையில் இருந்து பெண்களுக்கான முன்னேற்ற திட்டங்களை வரையிலான அபிவிருத்திகள் இதில் அடங்கும். உள்நாட்டுப் போரில் மக்கள் தொடர்ந்து உயிரிழந்து வருகின்றனர். இது தொடர்பில் கொழும்புப் பகுதி அங்கிலிக்கன் பேரா யர் ஒரு செய்தியை விடுத்திருந்தார். ஜனாதிபதி இது தொடர்பில் அதிகம் செயற்படவில்லை என்பது அதன் சாரம். அண்மையில் தமிழ் மக்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. நீதியற்றதும் இனப் பாகுபாட்டை கொண்டதுமாகும். இது எங்களுக்குள் பிளவை மேலும் அதிகரிக்க செய்யும் என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

முரளிதரன் உலகின் முதலாவது பந்து வீச்சாளராக வந்துள்ளார். சாதனையாளர் அவர். ஆனால் அவர் தனது துறைக்கு செய்ததை விட வெளியில் அதிகம் செய்துள்ளார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டவையாக நீதிமன்றங்களை மாற்ற சட்டம்

## பாக்.ஜனாதிபதி திட்டம்

(இஸ்லாமாபாத்)

பாக்கில் அவசர கால நிலையை விலக்கிக் கொள்வது தொடர்பாக வரும் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை மூன்று உத்தரவுகளை முஷரப் பிறப்பிக்கவுள்ளார்.



அத்துடன் தனது விசேஷ அதிகாரத்தை பயன்படுத்தி அரசியலமைப்புச் சட்டத்திலும் திருத்தம் கொண்டு வரவுள்ளார். இது தொடர்பாக தேவையான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு அதிபர் முஷரப்பின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. முதல் உத்தரவு அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டு வரப்படும் திருத்தமாக இருக்கும். இதன் மூலம் நாட்டில் உள்ள உள்நாட்டு நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றங்களுடனும் தொடர்புடையவைகளாக மாற்றப்படும்.

இதன் மூலம் ஆட்சியில் இருப்பவர்களுக்கு அனைத்து நீதிமன்றங்களும் கட்டுப்பட்டவையாக மாற்றப்படும். இது நீதித்துறையின் செயல்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப் படுகிறது.

இரண்டாவதாக நவம்பர் 3ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையை திரும்பப் பெறுவதாக உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மூன்றாவதாக அரசியலமைப்புச் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரும் உத்தரவை முஷரப்பிறப்பிக்கவுள்ளார். இதற்கிடையே மேல் நீதிமன்று முன்னாள் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி சட்டவிரோதமாக என்னை பதவியில் இருந்து நீக்க முயற்சித்தார் என்று முஷரப் குற்றம் சாட்டியுள்ளார்.

பாக்கில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக பேசிய முஷரப் மேலும் கூறியதாவது, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி தொடர்ந்து பதவியில் நீடிக்க அனுமதிக்கப்பட்டு இருந்தால் என்னை சட்ட விரோதமாக பதவியில் இருந்து நீக்கியிருப்பார். இதனால் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்பட்டு இருக்கும். இனி நடக்க இருக்கும் தேர்தல் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாக அமையும். ஆட்சிக்கு யார் வந்தாலும் அவர்களுடன் ஒத்துழைத்து செயல்பட தயாராக இருக்கிறேன்.

நான் பிரச்சினை ஏற்படுத்தும் ஆள் இல்லை. எந்த பிரச்சினையும் என்னால் நிச்சயமாக ஏற்படாது. தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி காபந்து அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்போது இராணுவத்துடன் எனக்கு நேரடி தொடர்பு கிடையாது. இராணுவத்துக்கு தலைமை வகிக்க தளபதி இருக்கிறார். இருப்பினும் இராணுவத்துடனான எனது 46 ஆண்டு கால தொடர்பு அறுந்து போய்விட்டது. என்னை இராணுவம் நினைத்துக்கொள்ளும். நான் இராணுவத்தை நினைத்துக்கொள்வேன். உள்நாட்டு, வெளிநாட்டு அச்சுறுத்தலில் இருந்து பாகிஸ்தானை இராணுவம் பாது காக்கும். நாங்கள் பயங்கரவாதத்தை அமெரிக்காவுக்காக எதிர்த்துப் போராடவில்லை எங்களுக்காகத் தான் போராடுகின்றோம்.

பாகிஸ்தானில் அல்-குவைதா, தலிபான் பயங்கரவாதிகளுக்கு இடம் இல்லை. எங்கள் பகுதியை அவர்கள் புகலிடமாக கொள்ள அனுமதிக்க முடியாது. அரசியல் தலைவர்களுடன் ஆலோசித்து பிறகு தான் சவாத் பகுதிக்கு இராணுவம் அனுப்பப் பட்டது இவ்வாறு முஷரப் கூறினார்.

(அ-5)

## காதலிக்குப் பரிசில் வழங்கும் ஆண் டொல்பின்கள்

(லண்டன்)

காதலில் கவிழ்ந்து விடுவது மனிதர்கள் மட்டும்தான் என்று நினைக்காதீர்கள். டொல்பின்களும் காதல் உணர்வில் கனிந்து பெண் டொல்பின்களுக்கு பரிசுக்



ளைக் கொடுத்து வசியப்படுத்துகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காதல் வயப்பட்டவர்கள் புலம்புவதை பார்த்திருப்பீர்கள். காதலியை கவர பரிசுகளை அள்ளிக் கொடுத்து அசத்துவார்கள். எதையாவது சொல்லி புலம்புவார்கள். மனிதன் மட்டும் அல்ல, கடலில் வாழும் டொல்பின்களும் ரொமான்சில் அசத்துகின்றன என்ற விஷயம் ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

கடலுக்கு அடியில் வசிக்கும் டொல்பின்கள் காதல் வயப்பட்டால் நூதனமான நடவடிக்கைகளில் ஈடுபடும். காதலிக்காக சாகசங்கள் செய்து பரிசுகளை எடுத்து வந்து தேடிப்பிடித்துக் கொடுக்கும்.

## உலக தரிசனம்

அதன் மூலம் காதல்உணர்வை வெளிப்படுத்தி உறவைப் பலப்ப டுத்துகின்றன. கேம்பிரிஜ் பல்கலைக்கழக பேராசியர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்திய ஆய்வில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காதலன் கொடுத்த பரிசுகளை பெண் டொல்பின்கள் மிகவும் பத்திரமாக பாதுகாக்கின்றன.


ஆய்வின்போது பெண் டொல்பின்களின் வாய் அல்லது பற்களுக்கு நடுவே பரிசு பொருட்கள் பாதுகாத்து வைத்திருந்தது கண்டுபிடிக் கப்பட்டது.

ஒரே பெண்டொல்பின் காதலுக்கு பல ஆண்டொல்பின்கள் போட்டி போடுவதும் உண்டாம்.

(அ-5)

## ஞாபகசக்திக்கு உதவும் புதிய புகைப்படக் கருவி

ஞாபக சக்தி குறைபாடு கொண்டவர்களுக்கென புதிய ரக இலத்திரனியல் புகைப்படக் கருவியொன்றை மைக்ரோசொப்ட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.



உள்ளங் கையில் அடங்கக்கூடிய இந்த சிறிய ரக புகைப்படக் கருவியானது ஒவ்வொரு 30செக்கன்களுக்கு ஒரு தடவையும் தினசரி நிகழ்சிகளை தன்னிச்சையாக படம் பிடிக்கிறது.

அத்துடன் அக் காட்சிகளை அதியுயர் வேகத்துடன் மீளத் திரையிட்டு காண்பிக்கும் ஆற்றலையும் இக் கருவி கொண்டுள்ளது.

இரு தினங்களுக்கு தொடர்ச்சியாக உபயோகிக்கக்கூடிய இந்த புகைப்படக் கருவி 30,000 புகைப்படங்களை சேமித்து வைத்திருக்கும் திறன் கொண்டது. மூளையில் ஏற்பட்ட நோயொன்றால் தனது ஞாபக சக்தியை இழந்த ஒரு 63வயது பெண்ணிடம் இந்த புகைப்பட கருவி மூலம் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

முன்பு 5 நாட்களுக்குள் அனைத்து விடயங்களையும் மறந்து விடுபவராக இருந்த அப்பெண்மணி இப்புகைப் படக் கருவியை பயன்படுத்தியபின் இரு வாரங்களுக்கு பிற்பாடு 90 சதவீதமான நிகழ்வுகளை மறக்காமல் கூறியுள்ளார்.

இப்பெண்மணி நடந்த நிகழ்வுகளை சம்பவங்கள் நடைபெற்ற இரு நாட்களில் புகைப்படக்கருவியைப் பயன்படுத்தி மீட்டிப் பார்த்ததன் மூலமே இது சாத்தியமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-5)

## கால்குலேட்டரை முந்தும் பிரான்ஸ் மாணவன்

(பாரிஸ்)

இந்தியாவை சேர்ந்த கணிதமேதை சகுந்தலா கால்குலேட்டரை போல கணக்குகளை உடனுக்குடன் கூட்டி, பெருக்கி சொல்லிவிடுவார். இவரை விட திறமையுடைய ஒருவர் பிரான்சு நாட்டில் இருக்கிறார். அங்குள்ள ரெயிம்ஸ் பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி.படிக்கும் அலெக்ஸ் லேமரி என்ற மாணவர் கால்குலேட்டரை விட வேகமாக கணக்குப் போட்டு சொல்கிறார்.

200 இலக்கம் கொண்ட எண்ணை கொடுத்து அதை 13 தடவை பெருக்கினால் என்ன வரும் என்று கேட்டால் 70. 21வினாடிகளில் அதன் விடையை சொல்கிறார். அதாவது கோடான கோடி எண்களை கொடுத்து கூட்டவோ, பெருக்கவோ சொன்னால் அடுத்த வினாடியில் விடை கிடைத்து விடுகிறது. (அ-5)

## 'காதல் ஆரோக்கியம் தரும்' ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

காதலிப்பது உடல் நலத்திற்கு ஆரோக்கியம் தரும் என்பதை சர்வதேச உடல் கூறு இயல் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இதுதொடர்பாகஉடல்கூறு இயல் ஆராய்ச்சியாளர்கள்வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரையில் கூறியுள்ளதாவது,

காதலிப்பது ஒருவரின் உடலிலும் மனதிலும் அமைதி உணர்வை ஏற்படுத்தும். எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மை அதிகரிக்கும். காதலிப்பதால் உடலில் சுரக்கும் ஹார்மோன்கள் நரம்பு மண்டலம் நன்கு செயல்பட உதவி புரிவதோடு மூளையில் புதிய செல்களை வளர்ச்சியடைய செய்து ஞாபக சக்தியை அதிகரிக்க செய்கிறது.

காதலிப்பதால் ஏற்படும் சந்தோஷம் மற்றும் மன நிறைவு மனதில் அமைதியை உருவாக்குகிறது. ஆனால் துரதிஷ்ட வசமாக ஒரு ஆண்டுக்கு பின் காதலில் உள்ள தீவிரத் தன்மை குறைந்து இதில் மாற்றம் ஏற்படுகிறது.

பொறாமையின் காரணமாகவும் உடலில் பாதிப்பு ஏற்படுகிறது. உடலுறவில் உள்ள தாழ்வு மன்பான்மை காரணமாக ஆண்களுக்கு எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். கணவர் வேறு ஒரு பெண் மீது கொண்டுள்ள நெருக்கம் காரணமாக ஏற்படும் சந்தேகங்களால் பெண்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (அ-5)

## நெட்டையும் குட்டையும்



(பாவ்டூ)

படத்தில் இருப்பவர் உலகின் உயரமான மனிதன் பாவ் சிஷூன். இவர் உலகின் குள்ள மனிதன் என்ற பெயரைப் பெறப் போகும் ஹி பிங்பிங் என்பவருடன் கை குலுக்குகிறார். மங்கோலியாவில் உள்ள பாவ்டூ என்னுமிடத்தில்தான் இவர்கள் சந்தித்துக் கொண்டனர்.

19 வயதான பிங்பிங்கின் உயரம் 2 அடி 5 அங்குலம். இவர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டி விண்ணப்பித்துள்ளார். சிஷூன் உயரம் 7 அடி 9 அங்குலம். இவர் எங்கே அவர் எங்கே?.

(அ-5)

## யானைக்கு காலணி

(சிங்கப்பூர்)



காலில் சேற்றுப்புண், பித்த வெடிப்பு, சிராய்ப்புஎனவிளம்பரக் கணக்கில்பிரச்சினைகளால்சிங்கப்பூர் யானைகள் துன், ஜமீலா தவிக்கின்றன.

அந்நாட்டு வனவிலங்கு பூங்கா வாசிகளான இவற்றின் அவஸ்தையை சகிக்க முடியாமல் பிரத்யேகமாக காலணி தயாரித்து மாட்டி விடுகின்றனர்கால்நடை வைத்தியர்கள்.

அப்பாடா ..சேறு, சகதி பிரச்சினை இனி இல்லை என்ற நிம்மதிப் பெருமூச்சுடன் காலணிக்குள் காலை நுழைக்கிறது துன். தனது முறைக்காக காத்து நிற்கிறது ஜமீலா. (அ-5)

## வெள்ளத்தில் மிதக்கும் மலேசியா



மலேசியா நாட்டில் கிழக்குப் பகுதியில் உள்ள பல நகரங்கள் பலத்த மழையினால் வெள்ளத்தில் மிதக்கின்றன. கௌந்தான் என்ற இடத்தில் சாலையில் இடுப்பளவுக்கு வெள்ளம் செல்லும் காட்சி. (அ-5)

## குளோனிங் முறையில் மினு மினுக்கும் பூனைகள்

### தென்கொரிய விஞ்ஞானிகள் உருவாக்கினர்



உலகம் முழுவதும் குளோனிங் ஆராய்ச்சி தீவிரமடைந்து வருகிறது முதன் முதலாக செம்மறி ஆட்டுக் குட்டிகள் குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டன. அதன் பிறகு அந்த முறையை பயன்படுத்தி பல்வேறு விலங்கினங்கள் உருவாக்கப்பட்டன. மரபியல் ரீதியிலான நோய்களைத் தீர்க்க குளோனிங் முறை பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்பதால் குளோனிங்கில் உயிரியல் விஞ்ஞானிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தென்கொரிய விஞ்ஞானிகள் சமீபத்தில் குளோனிங் முறை மூலம் 3 பூனைகளை உருவாக்கியிருக்கின்றனர். இந்த பூனைகளின் விசேஷம் என்னவென்றால் இவைகள் இருளில் செல்லும் போது அதன் உடல் மற்றும் கண்கள் மினு மினுக்கும். இதற்கொன விசேட புரோட்டீன் ஜீன்களை பயன்படுத்தி இந்த மிளிரும் பூனைகளை ஜியேன் சாஸ் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கோங்கியேன் தலைமையிலான விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கின்றனர். மொத்தம் 3 மிளிரும் பூனைகள் பிறந்தன. இவற்றில் ஒன்று இறந்து பிறந்தது. மற்ற 2 பூனைகள் நல்ல ஆரோக்கியத்துடன் வளர்ந்து வருகின்றன. மினுமினுக்கும் பூனைகளை உருவாக்கியது குளோனிங் உலகில் பெரிய சாதனையாக கருதப்படுகிறது. மரபியல் தொடர்பான பல் வேறு பிரச்சினைகளை தீர்க்க இந்த ஆராய்ச்சி உதவும் என்று விஞ்ஞானிகள் உற்சாகமடைந்துள்ளனர்.

(அ-5)


# ஆஸி. தொடரில் சேவக்!

(பெங்களூர்)

அவுஸ்திரேலிய தொடருக்கான டெஸ்ட் அணியில் சேவக் இடம்பிடித்துள்ளார். உத்தேச அணியில் இடம்பிடிக்காத இவருக்கு தேர்வுக் குழுவினர் கடைசி வாய்ப்பு அளித்துள்ளனர்.

இந்திய அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவிருக்கிறது. இதற்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் சமீபகாலமாக மோசமான பார்மில் இருக்கும் துவக்க வீரர் விரேந்தர் சேவக்கிற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக அறிவிக்கப்பட்ட 24பேர் கொண்ட உத்தேச அணியில் இடம்பெறாத இவர் காம்பிர் காமடைந்ததை தொடர்ந்து வாய்ப்பு பெற்றுள்ளார். பெங்களூர் டெஸ்டில் பங்கேற்காத சச் சின், தோனி, ஜாகிர் மற்றும் ஆர்.பி.சிங் ஆகி யோரும் காயம் குணமடைந்த நிலையில் அணியில் இடம்பிடித்துள்ளனர். இது குறித்து இந்திய கிரிக்கெற் சபை (பி.சி.சி.ஐ) செயலர் நிரஞ்சன்ஷா கூறியது: பிசியோரெ பிஸ்ட் ஜான் குளோஸ்டர் தனது அறிக்கையில் காம்பிருக்கு மூன்று வாரம் ஓய்வு வேண்டும் எனக் கூறியுள்ளார்.



இதனால் காம்பிருக்கு பதில் சேவக்கை அணியில் சேர்த்துள்ளோம். பாகிஸ்தான் தொடரில் ஜொலிக்காத முனாப் நீக்கப்பட்டுள்ளார். இவர் உள்ளூர் போட்டிகளில் அபார திறமையை வெளிப்படுத் தினால் மட்டுமே மீண்டும் அணியில் வாய்ப்பு கிடைக்கும் இவ்வாறு நிரஞ்சன்ஷா தெரிவித்தார்.

***இந்திய அணி:*** கும்ளே அணித்தலைவர், தோனி, சச்சின், டிராவிட், லட்சுமண், யுவராஜ், கங்குலி, ஹர்பஜன், ஜாகிர், ஆர்.பி.சிங், இஷாந்த் சர்மா, பதான், ஜாபர், சேவக், தினேஷ் கார்த்திக் பங்கஜ் சிங்.

# பாகிஸ்தானை வெல்வது சிறப்புத்தான் அணித்தலைவர் கும்ளே மகிழ்ச்சி

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றது மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று இந்திய அணியின் அணித்தலைவர் கும்ளே கூறி யுள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது,

இதனை சிறந்த தருணமாக உணர்கிறேன். பாகிஸ்தானுக்கு எதிராக வெற்றி பெறுவது எப்போதுமே சிறப்பு வாய்ந்தது தான். அதுவும் எனது சொந்த மைதானத்தில் தொடரை கைப்பற்றுவது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாக கருதுகிறேன். இது கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும். முதல் இன்னிங்ஸில் கங்குலியும் யுவராஜ்சிங்கும் அருமையாக ஆடினார்கள். கங்குலி துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் அபாரமாக செயல்பட்டார். உண்மையிலேயே அவருக்கு இது சிறந்த தொடராக அமைந்துள்ளது.




இந்த வெற்றி வருகிற அவுஸ்திரேலிய தொடரில் அதிக ஓட்டங்களை குவிக்க முடியும் என்ற நம்பிக்கையை எங்களது துடுப்பாட்ட வீரர்களுக்கு அளித்து இருக்கும். ஆனால் போதுமான ஓட்டங்களை எடுத்தால் தான், எங்களால் விக்கெற்றுக்களை கைப்பற்ற முடியும். மிஸ்பா உல்ஹக் தனிமனிதராக இருந்து, கொல்கத்தாவில் (2 ஆவது டெஸ்டில்) எங்களது வெற்றியை தடுத்துவிட்டார். அவரிடம் நிறைய திறமைகள் உள்ளன. இவ்வாறு கும் பிளே கூறினார்.



யூனிஸ்கான் கூறுகையில், எங்களுக்கு பந்து வீச்சு பிரச் சினையாக இருந் தது. சில வீரர்கள் முழு உடல்தகு தியுடன் இல்லா மல் இருந்தனர். இருப்பினும் மிஸ்பா நன்றாக விளை யாடினார். இதே போல் தனது முதல் டெஸ்டி லேயே யாசிர் அராபத்தும் சிறப் பாக செயல்பட்டார். இந்த தொடரில் இருந்து நிறைய கற்றுள்ளோம். மிஸ்பா என்ற துடுப்பாட்ட வீரரை அடையாளம் காணமுடிந்துள்ளது. இந்த தொடர் அடுத்து வரும் போட்டிகளுக்கு உதவியாக இருக்கும் என்றார்.

தொடர் நாயகன் கங்குலி கூறுகையில் இந்த தொடர் எனக்கும், அணிக்கும் சிறந்த தொடராக அமைந்தது. இது தொடரும் என்று நம்புகிறேன். எனது துடுப்பாட்டத்தில் பெரிய அளவில் நான் எந்த மாற்றமும் செய்யவில்லை. ஆனால் மனநிலையை மட்டும் சரிப்படுத்திக்கொண்டேன். 2ஆவது இன்னிங்ஸில் சதம் அடிக்காதது லேசான ஏமாற்றம் அளித்தது என்றார். (அ-5)

# சொந்தமண்ணில் 27 ஆண்டுகளுக்குப்பின் இந்திய அணி பாகிஸ்தானை வென்றது

(பெங்களூர்)

அணித்தலைவராக தனது முதல் தொடரிலேயே முத்திரை பதித்தார் கும்ளே. சொந்த மண்ணில் 27 ஆண்டுகளுக்கு பின்னர்



பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றி அசத்தினார். பெங்களூர் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. ஐந்தாம் நாளன்று இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் மனம் தளராமல் வீசிய போதும் வெற்றிபெற முடியவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெற் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரு நாள் தொடரை 2-3 என இழந்தது. 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 1-0 என முன்னிலை பெற்றிருந்தது. மூன்றாம் டெஸ்ட் பெங்களூரில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் இந்தியா 616, பாகிஸ்தான் 537 ஓட்டங்கள் குவித்தன. நான்காம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்திய அணி இரண்டாம் இன்னிங்ஸில் 2 விக்கெற் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்து 221 முன்னிலை பெற்றிருந்தது. கங்குலி (63), டிராவிட் (35) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஐந்தாம் மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. சமி பந்தில் பவுண்டரி அடித்து ஓட்ட கணக்கை துவக்கினார். கங்குலி எனினும் அக்தர் முழுவேகத்தில் பந்துவீச இந்திய அணி ஓட்டங்கள் குவிக்க தடுமாறியது. சுழற்பந்து வீச்சாளர் கனேரியாவும் துல்லியம் காட்ட இந்திய அணியின் ஓட்டங்கள் குவிப்புக்கு முட்டுக்கட்டை விழுந்தது.

எனினும் டிராவிட், கங்குலி ஜோடி மோசமான பந்துகளை பவுண்டரிக்கு விரட்ட தவறவில்லை. மூன்றாவது விக்கெற்றுக்கு 152 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் டிராவிட் ஆட்டமிழந்தார். இவர் 42 ஓட்டங்கள் எடுத்தார். சதம் நெருங்கிய கங்குலியை (91) தொடர்ந்து வந்த யுவராஜ் (2) ஆட்டமிழக்க 2 விக்கெற் இழப்புக்கு 178 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்து 5 விக்கெற்றுக்கு 184 ஓட்டங்கள் என இந்தியா சரிந்தது.

லட்சுமண் (14) ரிட்டயர்ட் ஹர்ட் முறையில் வெளியேறினார். கீப்பிங்கில் மிகவும் மோசமாக செயல்பட்ட தினேஷ் கார்த்திக் இம் முறை பொறுப் புடன் துடுப்பாடி அரைசதம் (52) பதிவு செய்தார். இந்திய அணி 6 விக்கெற் இழப்புக்கு 284 ஓட் டங்களுடன் ஆட் டத்தை நிறுத்தி பாகிஸ் தானுக்கு 374 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப் பட்டது.

துவக்க வீரர்களாக யாசிர் ஹமீத், சல்மான்பட் களமிறங்கினர். சமன் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் துடுப்பாடிய இந்த ஜோடி படு நிதானமாக ஆடியது. முதல் விக்கெற்றுக்கு 44 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் யாசிர் ஹமீத் (39) கும்ளே சுழலில் வீழ்ந்தார். அணித் தலைவர் யூனிஸ்கான் 'டக்' அவுட் ஆனார். சல்மான் பட்டும் (8) கும்ளேவிடம் சிக்க பாகிஸ்தானுக்கு சிக்கல் ஏற்பட்டது. நான்காவது விக்கெற்றுக்கு இணைந்த பைசல் இக்பால், மிஸ்பா கவனமாக துடுப்பாடினர். மேலும் பந்துகளையும் வீணடிக்கவில்லை.

அரைசதம் கடந்த பைசல் இக்பால், கும்ளே வலையில் விழ ஆட்டத்தில் திருப்பம் ஏற்பட்டது. இவரை தொடர்ந்து கம்ரான் (0), மிஸ்பா (38), அரபாத் (0) அடுத்தடுத்து வெளியேற இந்தியா வெற்றி பிரகாசமானது. இந் நிலையில் இந்திய அணியின் வில்லனாக இயற்கை மாறியது.

போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது பாகிஸ்தான் 7 விக்கெற் இழப்புக்கு 162 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஒளிவெள்ளத்தில் போட்டிகளை தொடர விரும்பம் இல்லை என இரு அணிகளும் ஏற்கனவே ஒப்புக்கொண்டதையடுத்து போட்டி சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. யூசுப் (10), சமி (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். கும்ளே 5 விக்கெற் வீழ்த்தினார்.

அக்தர் பரிசு: பெங்களூர் ரசிகர்களுக்கு சோயப் அக்தர் தனது டி-சர்ட், ஜெர்சிக்களை பரிசாக அளித்தார். போட்டி முடியும் தறுவாயில் பெவிலியனில் நின்றுகொண்டு டி-சர்ட் உள்ளிட்ட ஆடைகளை ரசிகர்களை நோக்கி தூக்கி எறிந்தார். (அ-5)

# டெஸ்ட்டையும் பகலிரவாக்க பரிசீலனை

ஒருநாள் போட்டிகளை பகலிரவு ஆட்டங்களாக மின்னொளியில் நடத்துவது போல டெஸ்ட் போட்டிகளையும் பகலிரவு போட்டிகளாக நடத்துவது பற்றி அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபை தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் அறிமுகமான பிறகு வண்ணச் சீருடை, வெள்ளை நிற பந்து, மின்னொளி ஆட்டம் என பல புதுமைகள் புகுத்தப்பட்டு பார்வையாளர்களை கவர்ந்தன.

தற்போது 20 ஓவர் கிரிக்கெற் போட்டி மேலும் புதுமைகளுக்கு வித்திட்டுள்ளது. இந் நிலையில் டெஸ்ட் போட்டிகளையும் பகலிரவு ஆட்டங்களாக நடத்துவது குறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபை பரிசீலித்து வருகிறது.

அனைத்து டெஸ்ட் போட்டிகளையும் இல்லாவிட்டாலும் ஒரு சில போட்டிகளை இப்படி மின்னொளியில் நடத்துவது நல்ல விஷயமாக இருக்கும் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபை தலைவர் ஜேம்ஸ் சதர்லேண்டு கூறியுள்ளார். இதனை எப்படி செயல்படுத்துவது என்பது குறித்த நடைமுறை விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் இன்னும் சில ஆண்டுகளில் பகலிரவு டெஸ்ட் போட்டி நடைமுறைக்கு வரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன் மூலம் மேலும் பல பார்வையாளர்கள் டெஸ்ட் போட்டிகளை காணும் வாய்ப்பு உருவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (5)


# ஆட்ட நாயகன் கங்குலி



முதல் இன்னிங்ஸில் இரட்டை சதம் எடுத்த கங்குலி இரண்டாவது இன்னிங்ஸிலும் பொறுப்புடன் துடுப்பாடிய 91 ஓட்டங்கள் எடுத்தார். எனினும் ஒரே டெஸ்ட் போட்டியில் ஒரு இரட்டைச் சதமும், சதமும் எடுத்த 7ஆவது கிரிக்கெற் வீரர் என்ற பெரு மையை பெற தவறினார்.

இதற்கு முன்னதாக டவ் வால்டர்ஸ், கிரெக் சாப்பல், லாரன்ஸ் ரவ், லாரா, சுனில் கவாஸ்கர், கிரகாம் கூச் ஆகியோர் இந்த மைக் கல்லை எட்டியுள்ளனர்.

இத் தொடரில் 534 ஓட்டங்கள் குவித்த கங்குலி தொடர் நாய கன் விருதோடு ஆட்ட நாயகன் விருதையும் கைப்பற்றி அசத்தி னார். இந்த ஆண்டு நடந்த 9 போட்டிகளில் 1,023 ஓட்டங்கள் குவித்துள்ளார். (அ-5)



இலங்கைக்கு எதிராக கொழும்பு எஸ்எஸ்சி மைதானத்தில் நடைபெற்ற இரண் டாவது டெஸ்டின் ஐந்தாம் நாளான நேற்று இங்கிலாந்து அணியின் ஹெவின் பீற்றர்சன் பந்து ஒன்றை எல்லைக் கோட்டுக்கு வெளியே விரட்டி அடிக்கும் காட்சி.



# சிறுவர் கல்விக்கு...

நாணயத்திற்கு மட்டுமல்ல இணையத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒரு பக்கம் ஆபாசமானது, அருவருப்பானது, ஆபத்தானது மற்றொரு பக்கம் அள்ள அள்ளக் குறையாத தகவல் சுரங்கம் பயனுள்ளது. மேம்படுத்துவது பெரியோரின் கண்காணிப்பின் கீழக் அவர்களது வழிகாட்டுதலின் படி இணைய வலையை இளம் வயது மாணவர்கள் பயன்படுத்தினால் அவர்களது ஆளுமையும் புத்திக் கூர்மையும் விடய ஞானமும் புதுப்பொலிவுடன் ஒளிவீசும்.

வீட்டில் இணைய இணைப்புடன் கூடிய கணனியை உடைய ஒரு மாணவர் அதை முறையாகப் பயன்படுத்தினால் அவர் நூலகங்களின் பக்கம் தலை வைத்துப் படுக்க வேண்டியதில்லை. என்னற்ற மின்-புத்தகங்கள் எக்கச்சக்கமான மாய உலகு நூல் நிலையங்கள் அவர்களது வருகைக்காக இருபத்தி நான்கு மணிநேரமும் காத்திருக்கின்றன. கூகிள் புத்தகத் தேடுகை மூலம் நிறைய நூல்களை இணையத் தொடர்பால் வாசிக்கலாம். மாணவர்களுடன் ஆசிரியர்களும் சேர்ந்தே பயன் பெறலாம்.

www.awesomelibrary.org ஒரு மிகச் சிறந்த நூலகம். இதன் உள்ளடக்கங்கள் யாவும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பானது என்பதால் உங்கள் வீட்டுச் சிறுவர்களை இத்தளத்தில் சுதந்திரமாக உலா வரச் செய்யலாம். பாட வாரியாக இணைப்புகள் உள்ளன. ஒவ்வொரு இணைப்பின் மீது தொடுக்கும் போதும் புதிய வலைமனைகள் காட்சியளிக்கின்றன. ஆங்கிலம், கணக்கு, அறிவியல் தொழில்நுட்பம், சுகாதாரம் போன்றவற்றோடு சம்பந்தப்பட்ட பயனுள்ள தகவல் கருவூலங்கள் மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடும்.

பாடங்களைத் திட்டமிடுவது எப்படி போதனைக்கு உதவும் பொருட்களைச் செய்வது எப்படி புரியவைக்கும் உத்திகள் யாவை என்பன போன்ற வினாக்களுக்கான விடைகளை இந்த நூலகத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் பெறலாம்.

பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் உதவும் ஆலோசனைகளும் இங்கு உண்டு. ம்ாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வமும் ஈடுபாடும் ஏற்படுத்த வழிமுறைகளை அவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

ஆசிரியர்களும் நிர்வாகிகளும் அறிந்திருக்க வேண்டிய மாணவர் பற்றிய மனவியல் உண்மைகளை இந்த நூலகத்தைப் பயன்படுத்தி அவர்கள் அறிந்து கொள்ளலாம். மாணவர்களின் பொதுவான பிரச்சினைகள் பற்றியும் அவற்றிற்கான தீர்வு ஆலோசனைகள் பற்றியும் ஏராளமான செய்திகள் இந் நூலகத்திலுள்ளன.

பள்ளிகளில் நிதி மேலாண் மை, நிதி வசதி ஆதாரங்களைப் பெருக்கும் வழிமுறைகள், அரசுகள் தரும் உதவிகள் குறித்த விபரங்கள் இங்கு பொதிந்துள்ளன. இவை தவிர நூலகர்களுக்கென்று ஒரு தனிப் பகுதியுமுள்ளது.

அமெரிக்க நூலகச் சங்கத்தின் இணையதளம் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும். இதை அடைவதற்கான இணைப்பு www.ala.org ஆகும். மாணவர் பகுதியை நேராகச் சென்றடைவதற்கான இணைப்பு www.ala.org/gwstemplate.cfm?section=greatweh-sites&template=/cfapps/gws/default.cfm

இங்கு குழந்தைகளுக்கு ஏற்றபாடங்கள் இனிய முறையில் கற்றுத் தரப்படுகின்றன.

விலங்குகளைப் பற்றிய செய்திகளைக் குழந்தைகள் ஆர்வமுடன் அறிவார்கள். படங்களும் சுவையான செய்திகளும் நிறைந்துள்ளதால் மொழிகள், கலை, அறிவியல், வரலாறு, கணக்கு, கணனியில், சமூக அறிவியல் சம்பதமுடைய தகவல் களஞ்சியமாக இந் நூலகம் திகழ்கிறது. நல்ல நூலகங்கள் எங்குள்ளன என்ற விபரமும் அவற்றை அடையும் பாதைகளும் இங்கு காணக் கிடைக்கின்றன.

www.starfall.com மாணவர்களுக்குப் பயனுள்ளதொரு இணையதளம், கல்வி, பயிற்றுவித்தலோடு தொடர்புடைய மென் பொருட்களை வாங்க விரும்புகிறீர்களா? www.educational/soft ware-directory.net க்குச் செல்லுங்கள் அங்கிருந்து உங்களுக்குத் தேவையான கல்வி மென்பொருட்களை விற்கும் நிறுவனங்களின் வலைமனைகளை அடை யலாம்.

பல்லூடகங்களைப் பயன்படுத்திச் சிறப்பாகச் செய்யப்பட்ட குறுந்தகடுகள் கற்கையை இனிமையாக்குகின்றன.

பொழுதுபோக்காக அவற்றைக் காணும் போது கிடைக்கும் பயன் வகுப்பறைகளில் பாடம் கேட்கும்போது விளையும் பயனுக்கு நிகரானது உங்களுக்கு அரு கில் அவை எங்கு கிடைக்கும் என கூகிள் தேடு கையால் அறியலாம். கடைக்குச் செல்லாமலே அவற்றை வாங்கவும் முடியும்.

**கணனிமலர்**

# பல்கிப் பெருகும் கணனி நோய்கள்


F-SECURE®

தயாரிப்பு

நீங்கள் ஒரு வைரஸ் -எதிர்ப்பு மென்பொருள் தயாரிப்பாளரிடம் மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றுபவராக இருந்தால் உங்களுக்கு அதிர்ஷ்ட தேவதையின் அருட்பார்வை கிடைக்கும் நேரம்இது. சம்பளத்தை இரட்டிப்பாக்காவிட்டால் பணியிலிருந்து விலகப்போவதாக அச்சுறுத்துவீர்களானால் உங்களுக்குப் பணிதலைத் தவிர உங்களது நிர்வாகத் தலைமைக்கு வேறு வழியில்லை. ஏனெனில் அடுத்த ஆண்டு ஊழியர் எண்ணிக்கையை இரு மடங்காக்கும் கட்டாயம் வைரஸ்-எதிர்ப்பு மென்பொருள் நிறுவனங்களுக்கு இருக்கிறது.

இவ்வாண்டு முதலாம் நாள் முதல் ஜூன் மாத இறுதிவரை நார்டன் வைரஸ்- எதிர்ப்பு மென்பொருள் விற்கும் நிறுவனமான சிமான்டெக் 2,12,101 புதிய கேடு விளைவிக்கும் குறியீடுகளை(Malicious code) கண்டறிந்துள்ளது. கடந்த ஆண்டில் சிமான்டெக் சேகரித்த கேடு விளைவிக்கும் குறியீடுகளைப் போல இது 185 சதவீதமாகும். நித்தமும் பெருகும் புதுப் புதுக் கிருமிகள் சிமான்டெக் நிறுவனத்திற்குப் பெரிய தலைவலி.

சிமான்டெக்கின் போட்டி நிறுவனமான எஃப்செக்கியூரின் f-secure நிலைமை இன்னும் மோசமானது. அதன் மென் பொருளைப் பயன்படுத்துவோர் 2006 உடன் முடிந்த இருபது ஆண்டுகளில் இரண்டரை இலட்சம் கெடுதி மென்பொருட்களை (malware) எஃப்செக்கியூருக்கு அனுப்பியிருந்தனர். இந்த ஒரு ஆண்டில் மட்டும் அவர்கள் அதே எண்ணிக்கையுள்ள கெடுதிப் பொருட்களை நிறுவனத்திற்கு அனுப்பியுள்ளனர். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சேகரிக்கப்படும் கேடு விளைவிக்கும் குறியீடுகளின் எண்ணிக்கை மாறுவது ஏன்? குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் மென்பொருளைப் பாவிப்போர் தாங்கள் வைரஸால் பாதிக்கப்படும் போது பாதிப்பை ஏற்படுத்தும் குறியீடுகளை நிறுவனத்திற்கு கிடைக்கச் செய்வர். மென்பொருளின் பிரபலத்திற்கு ஏற்றவாறு கிடைக்கும் குறியீடுகளின் எண்ணிக்கை இருக்கும்.



வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் நிறுவனங்களின் வாழ்க்கையை நரகமாக்குவதில் ஹேக்கர்கள் முழு முனைப்புடன் செயலாற்றுகிறார்கள். அவர்களின் உத்திகளில் பெரும் புரட்சிகள் இல்லையாயினும் எளிய தொழில்நுட்பப் புதுமைகளால் கணனி உலகைக் கலங்கடிக்கிறார்கள். பேருந்துகளில் பயணியரின் பணத்தைத் திருடுபவர் ஒருவர் இருக்கிறார் என வைத்துக்கொள்வோம். அவரது புகைப்படமும் வீட்டு முகவரியும் பொலிஸாரிடம் இருந்தால் அடுத்தமுறை திருடும் போது அவரைப் பிடிப்பது எளிது. ஒரு சின்ன பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மூலம் அவர் தனது முகத் தோற்றத்தை மாற்றிக்கொண்டால் அவரைக் கண்டுபிடிப்பது கடினமாகிவிடும். இதுபோலப் பழைய வைரஸ்களின் முகத் தோற்றத்தை மாற்றி வைரஸ்- எதிர்ப்பு மென்பொருட்களிலிருந்து அவற்றைத் தப்புவிக்கும் முறையை ஹேக்கர்கள் தற்போது பரவலாகப் பின்பற்றுகிறார்கள். குறியீடுகளை முன்னும் பின்னுமாக மாற்றியமைத்து விரைவில் ஒரு புது முகமுடைய வைரஸை அவர்கள் செய்கிறார்கள். விரைவான இச்செயல்பாட்டினால் நிறைய கண்டுபிடிக்கக் கடினமான வைரஸ் மென்பொ ருட்களை ஹேக்கர்கள் தயாரிக்கிறார்கள்.

ஒரு புதிய வைரஸ் கண்டறியப்பட்டால் அதற்கான காட்டி (indicator) வைரஸ்-எதிர்ப்பு மென்பொருள் செய்யும் நிறுவனத்தால் உண்டாக்கப்படுகிறது. புதிய முகமுடைய பழைய வைரஸ்களைப் பழைய காட்டிகள் அடையாளம் காண இயலாது.

வைரஸ்-எதிர்ப்பு மென்பொருட்களின் விற்பனையில் பெருத்த மாற்றம் இல்லை ஆனால், வைரஸ்கள் பல்கிப் பெருகியுள்ளன. இதனால் நிறுவனங்களில் வேலை அதிகரிக்கும், ஆனால் வருமானம் பெருக்வதில்லை. பயனீட்டாளர்களின் சிக்கல்கள் பெருகுவதால் வைரஸ்-எதிர்ப்பு மென்பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அதிக வேலை செய்து, அதிக சுமை சுமந்து, வாடிக்கையாளர்கள் உண்டாக்கும்.


அதிகச் சிக்கல்களைத் தீர்த்து பழைய வருமானத்தையே பெறுகின்றன. தலைவலிகள் எப்போது குறையுமோ தெரிவதில்லை. கணனி பயன்பட்டாளர்களும் வைரஸ்-எதிர்ப்பு நிறுவனங்களும் பெருகிவரும் சிக்கல் வலையில் சிக்குண்டுள்ளனர் என்பது நிச்சயம்.

# குறையும் திருட்டுகள்




கணனித் தொகுப்புக்களை இயக்கும் மென்பொருளான வின்டோஸ் விஸ்டாவைத் திருடுதல் வின்டோஸ் எக்ஸ்பியைத் திருடுதலை விடப் பாதி குறைவாக இருக்கிறது. குறுக்குப் புத்தியுள்ளவர்கள் திருடர்களும் கூட விஸ்டாவை விரும்புவதில்லை எனலாம். உண்மை என்னவென்றால் திருட்டைக் கட்டுப்படுத்த மைக்ரோசாஃப்ட் எடுத்த நடவடிக்கைகளுக்குக் கைமேல் பலன் கிடைத்துள்ளது.


விஸ்டாவைத் திருடுவது கடினமான காரணம். பழைய அனுமதி எண்கள் (license keys ) முறை கைவிடப்பட்டதுதான்.




இணையம் மூலம் ஒரு விஸ்டாவின் நகல் விரைவாக செயற்படுத்தப்படாவிடில் அது குறைந்த செயற்திறன் அமைப்பிற்கு (reduced functionality mode) மாறிவிடும்.

திருட்டுக் குறைந்ததால் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் விற்பனையும் வருவாயும் அதிகரித்துள்ளன. வின்டோஸ் உபயோகிப்பாளர்களின் எண்ணிக்கை ஐந்து சதவீதப் புள்ளிகள் அதிகரித்துள்ளதாகக் கடைசியாக எடுக்கப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது. இதன் நிஜமான பொருள் வின்டோஸை விலை கொடுத்துவாங்குவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்பதுதான். கணினியை இயக்கும் தொகுப்பின் செயல்திறன் குறைந்தால் கணினியில் நிறுவப்பட்டுள்ள மென் பொருட்களும் செயல் திறனை இழக்கும் அல்லது செயல்படாது இது மைக்ரோசாஃப்ட் ஒத்துழைப்பு நிறுவனங்களுக்கு நல்ல செய்தியல்ல. அவர்களது மென் பொருட்களின் விற்பனையும் பயன்பாடும் பாதிக்கப்படலாம்.

எனவே அவை செயல்திறன் குறைப்பைக் கைவிடுமாறு மைக்ரோசாஃப்ட்டை வலியுறுத்தி வந்தன. இப்போது அதற்குப் பயன் கிடைத்துள்ளது. ஆண்டின் முதல்கால் பகுதியில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படும் விஸ்டாவின் முதலாம் சர்வீஸ்பேக்கில் சட்டபூர்வமானது என்பதை இணையம் மூலம் நிரூபிக்காவிடினும் செயல்திறன் குறைதல் நிகழாது பின் எப்படி திருட்டைத் தடுப்பது?



தானே தோன்றும் எச்சரிக்கைகள் மூலம் விஸ்டாவை சட்டபூர்வமானது என இணையவழிச் சோதனையால் நிரூபிக்கப் பயனீட்டாளர்கள் மீண்டும் மீண்டும் நினைவூட்டப்படுவார்கள் என்கிறார் வின்டோஸின் உண்மைச் சாதகக் குழவின் (windows Genmuine Advantage group-wGA) மூத்த பொருள் மேலாளர் அலெக்ஸ் கோர்ச்சிஸ் பயனீட்டாளரின் கணினியில் விஸ்டாவை நிறுவும்போது அது சட்டபூர்வமானதா எனச் சோதிக்கும் மென்பொருளும் சேர்ந்தே நிறுவப்படும் சோதனையில் அது சட்டபூர்வமானது அல்ல என்று தெரிந்தால் புதுப்பிப்புக்களை சுமையிறக்கம் செய்ய முடியாது.

ஏற்கனவே இரு விதங்களில் திருடப்பட்ட விஸ்டா பொதுமக்களின் பயன்பட்டிருக்கிறது. மதர் போர்டின் பயாஸை (bios) திருத்துவது சட்டபூர்வமற்ற விஸ்டாவைப் பயன்படுத்தும் ஒரு வழி மற்றொன்று மென்பொருள் சம்பந்தப்பட்டது. விஸ்டாவை இணையவழி ஆய்வுக்கு உட்படுத்தும் கால அவகாசத்தை 2099 ஆம் ஆண்டுவரை இருப்பதாகத் திருத்துவது. திருடும் முயற்சிகளும் திருட்டைத் தடுக்கும் முயற்சிகளும் ஓயவில்லை கள்ளன் பெரிய வனா? காப்பான் பெரியவனா?

> ஒருவன் என்னை ஒரு முறை ஏமாற்றினால்– அவன் மானங்கெட்டவன். இரண்டு முறை ஏமாற்றினால்–நான் மானங்கெட்டவன்!
>
> – இஸ்ரேல்

வலம்புரி

# குழப்ப நிலையில் இலங்கை அரசியல்

2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறுகிறது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம், தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளார்.

எனவே இன்றைய வரவுசெலவுத்திட்டதின் மீதான வாக்கெடுப்பில் ரவூவ் ஹக்கீம் உட்பட நான்கு பேர் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பர்.

இதற்கு மேலாக, ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்திக் குழுவினரும் அதிரடித் தாக்குதலாக வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கலாம் என்ற ஊகங்களும் உண்டு.

இவைஅனைத்தும் வரவு செலவுத்திட்டத்துடன் தொடர்புபட்டவை. வரவு செலவுத்திட்டம் இன்றைய வாக்கெடுப்பில் தோற்றுப்போகுமாயின் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது சர்வநிச்சயம்.

நாடாளுமன்றம் கலைக்கப்படும் சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால் ஜே.வி.பியின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்ற ஆய்வு தனித்து மேற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஏனெனில் ஜே.வி.பியைப் பொறுத்தவரை அரசை எதிர்க்கவும் வேண்டும். அதேநேரம் நாடாளுமன்றம் கலைக்கப்படாமலும் இருத்தல் வேண்டும். இந்த இரண்டு முரண்பட்ட நிலைகளுக்கிடையில் ஜே.வி.பியின் காய் நகர்த்தல்கள் மக்களுக்கு அரசியலில் இருக்கக்கூடிய அதி உச்சமான கபடத்தனத்தை வெளிப்படுத்தும்.

ஆகவே, ஜே.வி.பி கடந்த முறை வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களித்ததென்பதற்காக அதேமுடிபை இன்றும் பின்பற்றும் என கூறமுடியாது.

ஆக,வரவு செலவுத்திட்டத்தின் வெற்றி தோல்வி முடிவுகளுக்கப்பால் இத்தகைய நிகழ்வுகள் அரசியல் பிறழ்வையே கோடி காட்டுகின்றது. வரவு செலவுத்திட்டம் தோற்றுப்போனால் நாடாளுமன்றக் கலைப்பும், பொதுத் தேர்தலும் நடக்கும் அதேநேரம் வரவு செலவுத்திட்டம் வெற்றி பெற்றால் நிலைமை சுமுகமாகிவிடுமா? என்றால் அதுதான் இல்லை.

ஏனெனில் அரசின் பலம் கூட்டுக்கட்சிகளில் தங்கியுள்ளது. கூட்டுக்கட்சிகள் ஏக ஆதரவை அரசுக்கு வழக்க ஒரு போதும் தயார் இல்லை. குறிப்பாக ஜே.வி.பி அரசுக்கு தொந்தரவு வழங்கிக் கொண்டே இருக்கும் எனவே கூட்டுக்கட்சிகளின் நிபந்தனைகள், தொந்தரவுகளை தாங்க முடியாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தை கலைத்து விடுவார்.

[illegible]னவே வரவு செலவுத்திட்டம் தோற்றுப்போகுமா[illegible]ன் நாடாளுமன்றக் கலைப்பு உடனடியாகவும், வெற்றிபெற்றால் நாடாளுமன்றக் கலைப்பு சில மாதங்களின் பின்னரும் இடம்பெறும்.

இந்நிலையில் ஒட்டுமொத்தமாக நோக்கும் போது இலங்கையின் அரசியல் குழப்பமாகவே காணப்படுகின்றது.

# தமிழகத்தின் பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் எதுவும் இல்லை - நோபல் தம்புராஜ்

(சென்னை)

விடுதலைப்புலிகள் அமைப்பால் தமிழகத்துக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்று தென்பிராந்தியத்துக்கான இராணுவ கமாண்டர் லெப்டினென்ட் ஜெனரல் நோபல் தம்புராஜ் கூறினார்.

நோபல் தம்புராஜ் தென்பிராந்தியத்துக்கு இராணுவ கமாண்டராக அக்டோபர் மாதம் பொறுப்பேற்றார். அதன் பின் முதல் முறையாக சென்னையில் நிருபர்களை கடந்த புதன் கிழமை சந்தித்தார். அப்போது அவர் கூறியது,

விடுதலைப்புலிகள் தொடர்பான பிரச்சினை தமிழகத்தில் அரசியல் உணர்வு ரீதியான பிரச்சினையாகவுள்ளது.

இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் தீவிரவாத அமைப்புக்களை இராணுவம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளாது. இலங்கையில் போர் தீவிரமாக நடைபெறுவதால் அங்கிருந்து அதிகளவில் அகதிகள் இந்தியாவிற்கு வருகின்றனர்.

இவர்களோடு தேசவிரோத சக்திகள் இந்தியாவிற்குள் வருவதை தடுக்க கடலோரக் காவல் படை, கப்பற்படையினர் கடலோரங்களில் தீவிரமாக ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாநில அரசும் புலனாய்வு அமைப்புக்களும் புலிகளின் நட[illegible]ட்டத்தைத் தீவிரமாக கண்காணித்து வருகின்றன. இந்த நி[illegible]யில் விடுதலைப் புலிகளால் தமிழகத்துக்கு அச்சுறுத்தல் ஏ[illegible]ம் இல்லை.

இந்தி[illegible] இராணுவத்துக்கு தற்போது இரண்டு கடமைகள் உள்ளன. இந்திய நாட்டை பாதுகாப்பது ஒன்று. இந்தியா தற்போது இந்தப் பிராந்தியத்தில் சக்திமிக்க நாடாக உள்ளது எனவே இந்தப் பிராந்திய வல்லரசாக மாறுவதற்கு இராணுவம் தயார் செய்து கொள்ளவேண்டும்.

நாடுகளிடமிருந்து இந்தியாவுக்கு வரும் அச்சுறுத்தலை விட தீவிரவாத இயக்கங்களால் தற்போது அதிக அச்சுறுத்தல் நிலவுகிறது. இந்தக் குழுக்களின் போர்முறைகளுக்கு ஏற்ப இராணுவத்தைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

மியான்மார்,வங்கதேசம்,நேபாளம்,பாகிஸ்தான் நாடுகளிலிருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகள் இந்தியாவிற்குள் ஊடுருவுகின்றன.

இந்த ஊடுருவல் குறித்து தகவல் சேகரிப்பதற்கு இராணுவத்திற்கு நவீனக் கருவிகளை வாங்க வேண்டியுள்ளது.

தீவிரவாத அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கு இராணுவம், மத்திய உளவுப் பிரிவு, உள்துறை ஆகிய அமைப்புகளிடையே தகவல் பரிமாற்றத்தில் ஒருங்கிணைப்பு அவசியம். தற்போது பாகிஸ்தானில் நிலவும் பிரச்சினையை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற உள்ளதால் பொதுமக்களின் கவனத்தை திசைத் திருப்பவும் தீவிரவாதிகளை நமது எல்லைப்பகுதிகளுக்குள் ஊடுருவச் செய்யலாம்.

எதிரிகளின் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் அமைப்பை நிறுவுவதில் இராணுவம் மும்முரமாக உள்ளது.

பாகிஸ்தானிடம் அணு ஆயுதம் உள்ளது குறித்து உலகம் முழுவதும் கவலை கொண்டுள்ளது. குறிப்பாக் அணு ஆயுதங்களை தகுந்த பாதுகாப்பில் வைத்துக்கொள்ளும்படி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பாகிஸ்தானை வற்புறுத்தி வருகின்றன.

முன்னாள் படைவீரர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க வேலூரில் இராணுவப் பயிற்சிப் பள்ளி அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிக்கு நிலம் பெறுவது குறித்து முதல்வர் கருணாநிதியிடம் பேசுவோம் என்றார். (அ-5)

# அரசாங்கத்தின் ஆதரவுடன் கிழக்கில் துணைக்குழுக்கள்

## ரவூவ் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கில் அரசின் முழுமையான ஆதரவுடனேயே துணைக்குழுக்கள் இயங்கி வருவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றில் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு, தமது பாதுகாப்பை நேற்று முன்தினம் முதல விலக்கியிருப்பதால் குறிப்பிட்ட துணைக்குழுக்களால் தமக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், இந்த விடயத்தை அனைத்துலகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவிருப்பதாகவும ஹக்கீம் தெரிவித்திருக்கின்றார்.

நர்டாளுமன்ற அமர்வைத் தொடர்ந்து ஊடகவியலாளர் மத்தியில் கருத்துரைத்த ரவூவ் ஹக்கீம், மகிந்த அரசு கிழக்கில் குடியேற்றங்களை மேற்கொண்டு இன விகிதாசாரத்தை குலைத்து வருவதாகவும் முஸ்லிம்களின் காணிகளை பறித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-5)

# இராணுவச் சீருடையில் நகைக்கடையில் கொள்ளை

(கொழும்பு)

நேற்று முன்தினம் மதியம் வெள்ளவத்தையில் அமைந்துள்ள நகைக்கடை ஒன்றினுள் இராணுவச் சீருடையில் சென்ற ஆயுதக்குழுவினர் கடைகளை சோதனையிடப் போவதாக கூறி ரூ.3 மில்லியன் பெறுமதியான நகையை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக தெரியவருகிறது.

'லிற்றில் ஜப்னா' என்ற நகைக்கடையினுள்ளே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது இவ் ஆயுததாரிகள் கடை உரிமையாளரை மிரட்டி பணத்தை[illegible]ம் நகையையும் மட்டுமல்லாது கடையினது பாதுகாப்பு [illegible]ப்படச்சுருளையும் எடுத்துச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. (அ-5)

# கொழும்பில் மாணவர் தாக்கப்பட்ட வேளையில் ஜப்பானில் மஹிந்தவை வரவேற்றது ஜே.வி.பி

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணங்களை கடுமையாக விமர்சனம் செய்து வரும் ஜே.வி.பியின் உண்மை முகம் ஜப்பானில் அம்பலமாகியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ ஜப்பான் சென்றமை தொடர்பாக டெய்லி நியூஸ் ஆங்கில நாளிதழ் இரு படங்களை வெளியிட்டிருந்தது.

அதில் ஒரு படத்தில் இரு குழந்தைகள் மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்பதும் மற்றொன்று ஜப்பானில் வாழும் சிங்கள மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்பதும் ஆகும்.

மிகப் பெரிய பரிவாரங்களுடன் வெளிநாடு செல்வதால் மக்களினது பணம் வீணடிக்கப்படுகிறது என்று தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்காக உருகி கண்ணீர் விடுகின்ற ஜே.வி.பியின் ஜப்பான் அமைப்பாளர் பெயர் சமன் பிரியங்கர.

ஜப்பானுக்கு பெரிய பரிவாரங்களுடன் சென்ற மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அவர் ஆர்ப்பாட்டம் நடத்தி 'கொள்கை'ப் பிடிப்பை வெளிப்படுத்தியிருப்பார் என்று கருதிவிடாதீர்கள்.

டெய்லி நியூஸ் வெளியிட்ட படங்களில் மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்ற குழந்தை சமன் பிரியங்கரவினதாம். மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்ற சிங்களவரும் சமன் பிரியங்கரதான். பூனைக்குட்டி வெளியே வருகிறது என்பது இதுதான் போல்!

இதில் கொடுமை என்னவெனில் மஹிந்த ராஜபக்ஷவை ஜப்பான் ஜே.வி.பி வரவேற்ற அதே நேரத்தில்தான் இங்கே ஜே.வி.பி. மாணவர்களை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமானது கொழும்பில் அடித்தும் நொறுக்கியும் கொண்டிருந்தது. (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை 47

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

மக்களிடையே அறிவின்மை காரணமாகப் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. தம்மைச் சூழ உள்ளவற்றைப் பற்றி அறிய முடியாத நிலையில் பலருளர். எமது முன்னோர் அறிவையும் செல்வத்தையும் விளக்குவதற்கு இரு தெய்வங்களாக அவற்றை உருவகப்படுத்தியுள்ளனர். நாவில் வீற்றிருக்கும் சரஸ்வதி அறிவின் தெய்வமாக வழிபடப்பட்டாள்.தாமரைப் பூவில் வீற்றிருக்கும் இலக்குமி செல்வத்தின் தெய்வமாக வழிபடப்பட்டாள். நாமகள், பூமகள் எனச் சிறப்பாக இத் தெய்வங்களை அழைத்தனர்.

இன்று இக் கருத்தைச் சிலர் ஏற்கத்தயங்குவர். ஆனால் அறிவும் செல்வமும் சேராதிருப்போர் மனதில் குழப்பம் இருப்பதை நன்கு உணர்ந்த நமது முன்னோர் இவ்வாறு இரு பெண் தெய்வங்களைக் கருத்து நிலையில் காட்டி மக்களைத் தெளிவுபடுத்த முயன்றனர். அறிஞராயிருப்பவர் வறுமையில் உழலக் காரணம் என்ன என்பதை விளக்க ஒரு கதையைக் கூறிச் சென்றுள்ளனர்.

பெண்மையின் போட்டியான மனநிலையை முன்வைத்து நாமகள் இருக்குமிடத்தில் பூமகள் சேர்ந்திருக்க விரும்பாள் என்ற ஒரு மனித வாழ்வியல் நிலையின் மூலம் மக்களை உணர வைக்க முயன்றுள்ளனர். அறிவு, தொல்லை வினைச் சிறப்பால் நம்மிடம் வந்துசேர்வது. எனவே அது எம்முடன் பிறவி தோறும் தொடர்ந்துவரும். செல்வத்தை மட்டுமே தேடுபவர் இதனை[illegible]ர்வதில்லை என்பதை விளக்க முயன்றுள்ளனர்.

பல நூல்களையும் கற்று அறிந்தவர் சிலவேளைகளில் தமது பெருமை கெட்டு துன்புறுவதற்குக் காரணம் இந்த நாமகளும் பூமகளும் ஒரேயிடத்தில் இருக்க விரும்பாமையே. எனவே அறிஞர் வறியவராவதற்குக் காரணம் ஊழ்வினையே. அது பற்றி அவரைக் குறை கூறுவது அறிவின்மையாகும். நமது வாழ்வியல் நிலையில் ஒருவனிடம் ஒரு பெண் கூடியிருக்கும் போது வேறொரு பெண் வந்து அவனைக் கூடாது ஊடுவது உலகியல்பாக உள்ளது. அதனையே நாமகள் கூடின

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இடத்தைப் பூமகள் கூடாது . ஊடுவது; என்ற கற்பனை நிலையாக முன்னோர் கொண்டிருந்தனர். இதற்குப் பிறிதொரு கதை மரபும் உண்டு. மருமகளான நாமகள் இருக்குமிடத்தில் மாமியாரான பூமகள் ஒருங்கிணைந்து இருக்க மாட்டாள் எனக் கூறும் வாய் மொழி மரபும் உண்டு. இன்று தெய்வ நிலையில் நாமகளும் பூமகளும் வழிபடப்படுகின்றனர். எனினும் அறிவின்மை காரணமாகக் கற்பனை நிலையில் மேற்காட்டிய கருத்தை நினைந்து வாழ்வது அறிவின்மையே உண்மையான அறிவால் எல்லாவற்றையும் நன்கு உணர்ந்து செயற்படவேண்டுமென நாலடிப்பாடலொன்று விளக்கியுள்ளது.

'பல்லான்ற கேள்விப் பயன் உணர்வார் பாடழிந் (து)
அல்லல் உழப்ப(து) அறிதிரேல்–தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலால் சேரானே
பூவின் கிழத்தி புலந்து'

(நாலடியார் 252)

## சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து

# அதிகாரப் பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்

### சர்வதேச சர்வமதக் குழு வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

**இழப்புக்ளைத் தவிர்த்து உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து அதிகாரப்பரவலாக்கல் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென சர்வதேச சர்வமத மாநாட்டில் பிரகடனம் எடுக்கப்பட்டது.**

தொடரும் யுத்தத்தினால் இழப்புக்கள் அதிகரித்துச் செல்கின்றன.

இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இனம், மத, மொழி என்பவற்றால் வேறுபாடுகள் இன்றி சம உரிமைகளுடன் வாழ வேண்டும் என சர்வமத தலைவர்கள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரகடனம் தொடர்பாக சர்வமதத் தலைவர்கள் ஒன்றிணைந்து, அரசியல் கட்சிகள் மற்றும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தவும் மாநாட்டில் முடிபுகள் எடுக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய வடக்குக் கிழக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த இந்து ,கிறிஸ்தவ, இஸ்லாம் மற்றும் பௌத்த மத தலைவர்கள் விரைவில் கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டு நிறைவில் கருத்துத் தெரிவித்த இலங்கை சர்வமத சமாதானக் குழுவின் நிறைவேற்று அதிகாரி கிங்ஸ்லி ரொட்றிக்கோ, இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் சந்தித்து இம்மாநாட்டின் வெளிப்பாடு தொடர்பாக எடுத்துக் கூறி குழுவின் கிளிநொச்சி விஜயம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் மதியம் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடாத்தி மாநாட்டில் பிரகடனம் வெளியிடப்படும் எனத் தெரிவித்தனர்.

கொழும்பில் அரசாங்கப் பிரதிநிதிகளையும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆகியோரை சந்தித்து மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை எடுத்துரைப்பதுடன் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோரை சந்தித்து மாநாடு தொடர்பாக எடுத்துரைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ச-5)

### வரவு-செலவுத் திட்டத்தில் அரசு தோல்வியடையும் -ஐ.தே.க.

(கொழும்பு)

அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு அடிபணியாது இன்றைய தீர்க்கமான தினத்தில் மக்களுக்கு எதிரான வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்து அதனைத் தோல்வியடையச் செய்வதன் மூலம் மக்களின் தன்னாதிக்கத்தைப் பாதுகாக்க சகல எம்.பிக்களும் முன்வரவேண்டும் என்று ஐ.தே.கட்சியின் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் உள்ள அதிருப்தியாளர்கள் குழுவும் வரவு-செலவுத் திட்டத்தினை எதிர்க்கவுள்ளமையினால் வரவு-செலவுத் திட்டத்தில் நிச்சயம் அரசாங்கம் தோல்வியடையும் என்றும் அவர் கூறினார். (ச)

### இறுதி...

முடிபினை நாம் எடுப்போம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது எத்தகைய முடிபினை எடுப்பதென்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். இது தொடர்பில் நாளை (இன்று) நாம் உறுதியான முடிபினை எடுப்போம் என்றார் மலையக மக்கள் முன்னணியின் பெ.இராதாகிருஷ்ணன். (ச)

### எம்.பிக்களின்...

கவலை கொள்கின்றது. கடத்தல் என்பது பயங்கரவாதிகளின் அணுகுமுறையாகும். ஐரோப்பிய ஒன்றியம் இதனைக் கண்டனம் செய்கின்றது.

கடத்தப்பட்டோருக்கு எவ்வித துன்புறுத்தலும் செய்யாமல் அவர்களை உடனே விடுவிக்க வேண்டும். கடத்தல்காரர்களிடம் செல்வாக்குச் செலுத்துவோர் இதனை உடனே முடிபுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்.

ஜனநாயகத்தின் விழுமியங்களைப் பாதுகாத்துச் சட்டத்தின் ஆட்சியை மேற்கொள்வோருக்கு நாம் எமது முழுமையான ஆதரவினை வழங்குவோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

### தமிழீழ...

விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி, தொண்டு நிறுவனங்களுக்கான இணைப்பாளர் பாவரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுனிசெவ் பிரதிநிதியின் அறிமுக சந்திப்பாக இச் சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

### அரசியல் ரீதியான எந்த சவால்...

ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம், தமது கட்சியின் மூன்று உறுப்பினர்களுடன் எதிர்த்தரப்பு ஆசனத்தில் போய் அமர்ந்ததினால் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்து விடவில்லை.

முஸ்லிம்களின் நலனை முன்வைத்து அவர் இந்த முடிபை எடுத்திருப்பார் என்று கூற முடியாது. இதற்குப் பின்னணியில் வேறு காரணங்கள் இருக்கலாம். அது விரைவில் வெளிச்சத்திற்கு வரும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தையடைந்துள்ள நிலையில் புலிகள் இறுதி மூச்சு வாங்கிக் கொண்டிருக்கும் வேளையில் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் விதமாக செயற்படுவது புலிகளுக்கு ஒட்சிசன் வழங்குவதைப் போன்றதாகும்.

எமது நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களில் அநேகமானவர்கள் அரசாங்கத்துடன்தான் உள்ளார்கள். ஒரு சிலர் அரசாங்கத்தை விட்டுச் சென்றதனால் இந்த மக்கள் ஆதரவு இல்லை என்று கருதுவது தவறானது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூவ் ஹக்கீமின் பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

அமைச்சர் ஒருவருக்குப் பாதுகாப்பு எவ்வாறிருக்க வேண்டும் என சட்டதிட்டங்கள் உள்ளன. தற்போது அவர் அமைச்சர் அல்ல. எனவே அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் குறைக்கப்பட்டிருக்கலாம். இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதொன்றதல்ல. ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கும் பாதுகாப்புச் சலுகைகள் அவருக்கு மறுக்கப்படவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

### பட்ஜெட்டில் வெற்றி பெற ஆளும்...

தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடனும் ஐ.தே.கவினர் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். வரவு-செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிராக வாக்களித்த ஜே.வி.பி. இன்று நடைபெறவுள்ள 3 ஆம் கட்ட வாக்கெடுப்பிலும் எதிராகவே வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த முறை வாக்கெடுப்பின்போது ஆளுங்கட்சிக்கு 118 வாக்குகளும் எதிர்த்தரப்புக்கு 102 வாக்குகளும் கிடைத்தன. அன்றைய தினம் இரு கூட்டமைப்பு எம்.பிக்கள் சமுகமளிக்கவில்லை. அவர்களும் சமுகமளித்திருந்தால் 104 வாக்குகள் எதிராகக் கிடைத்திருக்கும்.

தற்போது முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 4 பேர் எதிர்த்தரப்புக்கு வந்துள்ளமையினால் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக 108 வாக்குகள் கிடைக்கும். இன்னமும் 5 உறுப்பினர்களின் ஆதரவு எதிரணிக்குக் கிடைத்தால் வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

இதேவேளை தமது கட்சியின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று நாடாளுமன்றத்திற்கு சமுகமளிப்பர் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேந்திரன், தங்கேஸ்வரி, ஜெயானந்தமூர்த்தி ஆகியோரின் முடிபு இன்று நாடாளுமன்றத்திலேயே எடுக்கப்படும் என்றும் ஏனையவர்கள் எதிர்த்து வாக்களிப்பர் என்றும் அவர் மேலும் கூறினார். (எ-5)

### பருத்தித்துறை வியாபாரிமூலையில்...

இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்த வேளையிலேயே இந்த இருவரும் கிரனைட் ஒன்றை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

தேடுதல் நடத்தும் இராணுவத்தினரிடமிருந்து தப்புவதற்காக இந்த இருவரும் பக்கத்தில் இருந்த வீடொன்றினுள் நுழைந்து கூரையினுள் தற்கொலை செய்து கொண்டதாகப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டில் வசிக்கும் 45 வயது தாய், 2 பெண் பிள்ளைகள் மற்றும் இரு ஆண் பிள்ளைகள் ஆகியோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த மாணவிகள் இருவரும் உடனடி சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் படையினரால் பரீட்சை நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இரு இளைஞர்களினதும் சடலங்கள் மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. படுகாயமடைந்தவர்கள் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்த இருவரும் அடையாளம் காணப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-5)

### ரவூவ்...

காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவரினதும் அதன் தலைவர் ஹக்கீமினதும் பாதுகாப்புக்கள் விலக்கப்பட்டுள்ளன.

அவர்களின் பாதுகாப்புக்கு இரு பொலிஸ் உறுப்பினர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் தலைவரின் உத்தரவுக்கு அமைவாகவே பொலிஸ் மாஅதிபரின் பணிப்பின்பேரிலேயே பாதுகாப்புக்கள் விலக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

### எதிர்க்கும்...

வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவதும் இறுதியுமான வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது. இதன்போது ஜே.வி.பி. எந்தவிதத்தில் செயற்படுமென கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச)

### தரையிறங்கும்...

படத் தவறியமையினால் விமானம் தரையிறங்க முடியாத நிலை ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

இதனையடுத்து அவ்விமானம் உடனடியாக இரத்மலானைக்குத் திரும்பியது. ஆனால் இரத்மலானையில் தரையிறங்க அந்த விமானத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டு கட்டுநாயக்கவுக்குத் திரும்பி அனுப்பப்பட்டது.

அதேநேரத்தில் கட்டுநாயக்க தளத்தில் அந்த விமானம் மோதக் கூடும் என்று அதிகாரிகள் அஞ்சியதால் இரத்மலானையிலேயே கடைசியில் நீண்ட போராட்டத்திற்குப் பின்னர் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டது.

இரத்மலானையில் அந்த விமானம் தரையிறங்குவதற்கு முன்பாக அம்புலன்ஸ் வாகனங்கள், தீயணைப்புத் தளபாடங்கள் ஆகியவற்றை அதிகாரிகள் ஒழுங்கு செய்திருந்ததாகக் கூறப்பட்டது.

இச் சம்பவத்தையடுத்து அவ்விமான சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டது. (எ-5)

### ஏ-9 பாதையைத் திறப்பதற்கு ...

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; கிராமங்கள், நகரங்கள் தோறும் சமாதானக் குழுக்களை அமைத்து சமாதானத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இதனை நான் யாழ்ப்பாணத்தில் கண்டு உணர்ந்துள்ளேன்.

யாழ்ப்பாணத்திலுள்ள சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரைச் சந்தித்துப் பேசியபோது அவர்களிடம் இருந்து பல தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே இவ்வாறான குழுக்கள் அனைத்து இடங்களிலும் அமைக்கப்பட வேண்டும்.

இந் நாட்டில் சமாதானம் அத்தியாவசியமாகவுள்ளது. யுத்தம் தொடர்ந்து அழிவுகளையே தரும். இலங்கையைப் போன்று யப்பானிலும் குண்டுகளின் ஓசை ஒலித்துக் கொண்டேயிருந்தது. இதனால் பெரும் அழிவுகளும் ஏற்பட்டது.

ஆனால் அதனை மாற்றியமைத்து தற்போது யப்பான் ஒரு பொருளாதார வளர்ச்சி கண்ட நாடாகவுள்ளது. இதேபோன்ற நிலை இங்கு ஏற்பட வேண்டும் என்பதே எமது இலக்காகும்.நான் யாழ்ப்பாணத்திலிருந்தபோது பல்வேறு விடயங்களை அறிந்துகொண்டேன் என்றார் இலங்கைக்கான யப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி. (ச-5)


## கண்ணீர் அஞ்சலி

**எமது அலுவலகத்தில் நீண்ட காலமாக கடமையாற்றிய**

**சபாரட்ணம் கனகசபாபதி**

**(கிராம சேவையாளர், காரைநகர் கிழக்கு J/42)**

**13.12.2007 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**அரசாங்க அதிபர் பணிமனை**
**காரைநகர்**

**உதவி அரசாங்க அதிபரும்**
**பணிமனை உத்தியோகஸ்தர்களும்**

(C-602)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ. ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோ[illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.